03.07.2015

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

## ஊட்டியில் 'உருண்டது' உருளைக்கிழங்கு சாகுபடி!சந்தை நெருக்கடியால் கேரட்டுக்கு தாவினர் விவசாயிகள்

ஊட்டி:வெளிமாநில உருளைக்கிழங்கு வரவு, சந்தையில் போட்டியிட முடியாமை, பயிர்களை தாக்கும் நோய் உள்ளிட்ட காரணங்களால், ஊட்டியில் உருளைக் கிழங்கு சாகுபடி பரப்பு குறைந்துள்ளது.நீலகிரி மாவட்டத்தில் ஊட்டி, குன்னூர், கோத்தகிரி உள்ளிட்ட இடங்களில் உருளைக்கிழங்கு, பீன்ஸ், காரட், முட்டைக்கோஸ், பீட்ரூட் என, பல வகை காய்கறிகள் சாகுபடி செய்யப்படுகின்றன.ஊட்டி உருளைக்கிழங்குக்கு மேட்டுப்பாளையம், சென்னை உள்ளிட்ட தமிழகத்தின் பல பகுதிகளிலும், கர்நாடக மாநிலத்திலுள்ள குண்டல்பேட்டை, மைசூரு உள்ளிட்ட வெளிமாநில சந்தையிலும் கிராக்கி அதிகம். ஊட்டி உருளைக்கிழங்கின் தரம், சுவை அதிகம் என்பதால், மக்களும் அதிகளவு வாங்கிச்சென்றனர்.

தற்போது, ஊட்டியில் உருளைக்கிழங்கு சாகுபடி செய்யும் பரப்பு நாளுக்கு நாள் குறைந்து வருகிறது. தோட்டக்கலைத்துறை கணக்கெடுப்புப் படி, நீலகிரி மாவட்டத்தில் 1,547 எக்டர் பரப்பளவில் உருளைக் கிழங்கும், 2,656 எக்டர் பரப்பளவில் கேரட் சாகுபடி யும் மேற்கொள்ளப்பட்டு

வந்தது.தற்போது, கேரட் சாகுபடி செய்யும் பரப்பு, 1,500 எக்டராக அதிகரித்து, 4,000 எக்டர் பரப்பளவில் மேற்கொள்ளப்படுகிறது. இதுவே உருளைக்கிழங்கு சாகுபடி பரப்பு குறைய காரணம் என, தோட்டக்கலை துறை இணை இயக்குனர் மணி தெரிவிக்கிறார்.

நீலகிரி உருளைக்கிழங்கு மற்றும் காய்கறி உற்பத்தியாளர்கள் சங்க தலைவர் கிருஷ்ணமூர்த்தி கூறியதாவது:உருளைக்கிழங்கு தற்போது, கர்நாடக மாநிலம் ஹாசன், கோலார் பகுதிகளில் இருந்தும், உ.பி.,யில் இருந்தும் அதிகளவு மேட்டுப்பாளையம், சென்னை சந்தைக்கு வருகின்றன.ஊட்டி உருளைக்கிழங்கை விட, வெளிமாநில உருளைக்கிழங்கின் விலை சற்று குறைவு. இதனால், மொத்த வியாபாரிகள் அத்தகைய உருளைக் கிழங்குகளை அதிகளவில் கொள்முதல் செய்கின்றனர். வட மாநில வியாபாரிகளுடன் போட்டியிட முடியாததால், நீலகிரி விவசாயிகள், கேரட் சாகுபடிக்கு மாறத்துவங்கியுள்ளனர்.

இவ்வாறு, கிருஷ்ணமூர்த்தி தெரிவித்தார்.ஊட்டியைச் சேர்ந்த விவசாயி சுரேந்திரன் கூறுகையில், “ஒரு ஏக்கரில், உருளைக்கிழங்கு பயிரிட, 80 ஆயிரம் ரூபாய் செலவாகிறது. உருளைக் கிழங்குக்கு சந்தையில் அடி விழுந்ததால், முதலுக்கே மோசம் ஏற்பட்டது. தவிர, உருளைக்கிழங்கில், பின் கருகல் நோய் தாக்குதல் பிரச்னையும் இருந்தது.

கேரட் சாகுபடியில் விதைகளின் விலை கூடுதல் என்றாலும், விளைச்சல் நன்றாக உள்ளது; ஒரு ஏக்கரில், 30 டன் கேரட் பெற முடிகிறது,” என்றார்.

## வேளாண் கண்காட்சி துவக்கம்

செங்கல்பட்டு: காட்டுப்பாக்கம் வேளாண் அறிவியல் நிலையத்தில், வேளாண் உற்பத்தியைஅதிகரிக்க, தொழில்நுட்ப கருத்தரங்கம் மற்றும் கண்காட்சி நேற்று துவங்கியது.தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்தின், மறைமலை நகர் அடுத்த, காட்டுப்பாக்கம் வேளாண் அறிவியல் நிலையம் சார்பில், வேளாண் உற்பத்தியை பெருக்க,புதிய தொழில்நுட்பங்கள் என்ற தலைப்பில், கருத்தரங்கு மற்றும் கண்காட்சி நிலையவளாகத்தில், நேற்று நடைபெற்றது.லோக்சபா உறுப்பினர் மரகதம் தலைமை தாங்கி துவக்கி வைத்தார். வேளாண்மை அறிவியல் நிலைய தலைவர் மற்றும் பேராசிரியர் குமாரவேல் வரவேற்றார். திருப்போரூர் சட்டமன்ற உறுப்பினர் மனோகரன், பல்கலைக் கழகத்தின் விரிவாக்கக் கல்வி இயக்குனர் தியாகராஜன் உட்படபலர் கலந்து கொண்டனர்.இக்கண்காட்சியில், வேளாண்மை, தோட்டக் கலை, கால்நடை வளர்ப்பு, கோழி வளர்ப்பு, மதிப்பூட்டியப் பொருட்கள், அரசு சார்ந்த நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், வேளாண் உணவகம் போன்ற அரங்குகள் அமைத்திருந்தனர். இந்த கண்காட்சியில், பகுதிவாசிகள் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர். அதை தொடர்ந்து, இன்றும் கண்காட்சி நடைபெறுகிறது. இதில், விவசாயிகள் மற்றும் பகுதிவாசிகள் கலந்து கொள்ளலாம்.

## விலை 'உருகாத' தேங்காய் எண்ணெய்:தென்னை சாகுபடியாளர்கள் அதிருப்தி

பொள்ளாச்சி:தேங்காய் விலை பாதியாக குறைந்தும், தேங்காய் எண்ணெய் விலை குறையாமல் இருப்பது, தென்னை சாகுபடியாளர்கள், மக்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.கடந்த சில நாட்களாக பெய்த தென்மேற்கு பருவமழை, விவசாயத்துக்கு ஏதுவாக இருந்தது.

விவசாயிகள் பலர், ஆங்காங்கே மானாவாரி நிலங்களில் நிலக்கடலை மற்றும் அரசாணிக்காய் விதைகளை விதைத்தனர். தற்போது மழை நின்று, ஒரு வாரத்துக்கும் மேலானதால், நிலக்கடலை செடிகளில் 25 பிஞ்சுகள் இருக்க வேண்டிய இடத்தில் 10 பிஞ்சுகளே பிடித்துள்ளன. இதேபோல், அரசாணிக் கொடிகளும், நீரில் மூழ்கியே இருந்ததால் கொடிகள் பெரும்பாலும் அழுகி விட்டன.இதனால், நடப்பாண்டில், மானாவாரி சாகுபடி, 40 சதவீதமே கிடைக்கும் என, கேரளாவை ஒட்டிய விவசாயிகள் வேதனை தெரிவித்தனர்.ஒரு சில இடங்களில், எதிர்பார்த்த அளவு மழை பெய்யாததால், விதைப்பும் நின்றது. இதை ஈடுகட்டும் வகையிலும், முளைத்த பயிர்கள், வளர்ச்சி காணவும், மீண்டும் மழை பெய்தால் மட்டுமே விவசாயிகளுக்கு திருப்தி ஏற்படும் நிலை உள்ளது.

பி.ஏ.பி., பாசன விவசாயிகள் சங்க பிரதிநிதி பரமசிவம் கூறியதாவது: தென்னை வளர்ச்சிக்கு, இம்மழை பெரிதும் உதவியுள்ளது. ஆனால், மழைக்கு முன்பிருந்த விலை, தற்போது கிடைக்காதது அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. 15 ரூபாய்க்கு விற்ற தேங்காய், தற்போது எட்டு ரூபாய்க்கு விற்கிறது. இவ்விலையை கொடுப்பதற்கும் வியாபாரிகள் தயக்கம் காட்டுகின்றனர்.தேங்காய் விலை பாதியாக குறைந்த நிலையிலும், தேங்காய் எண்ணெய் விலை குறையவில்லை; இது, இடைத்தரகர்களின் சூழ்ச்சியாக இருக்குமோ? என்ற சந்தேகத்தை, தென்னை சாகுபடியாளர்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது. சூழ்ச்சி இருந்தால், இடைத்தரகர்கள் மீது நடவடிக்கை எடுத்து, விலையை கட்டுக்குள் கொண்டு வந்தால் மட்டுமே, தென்னை சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம் காட்டுவர்.இவ்வாறு, பரமசிவம் கூறினார்.

**நாமக்கல்லில் மஞ்சள் சாகுபடி: தொழில்நுட்ப இலவச பயிற்சி**

நாமக்கல்:நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில், வரும் ஜூலை, 7ம் தேதி காலை, 9 மணிக்கு மஞ்சள் சாகுபடி தொழில்நுட்பம் குறித்த ஒருநாள் இலவச பயிற்சி நடக்கிறது.

திட்ட ஒருங்கிணைப்பாளர் மோகன் வெளியிட்ட அறிக்கை:ஜூலை, 7ம் தேதி நடக்க உள்ள மஞ்சள் சாகுபடி தொழில் நுட்பங்கள் குறித்த பயிற்சியில், புதிய மேம்படுத்தப்பட்ட ரகங்கள், அதன் சிறப்பியல்புகள், விதையளவு, விதை நேர்த்தி, நடவு முறை, உர மேலாண்மை, நீர்ப்பாசனம், களை நிர்வாகம், பூச்சி மற்றும் நோய் நிர்வாகம், துல்லிய பண்ணை முறையில் மஞ்சள் சாகுபடி முறைகள் மற்றும் விதைக்கிழங்குகளை சேமிக்கும் முறை பற்றிய விளக்கங்கள் அளிக்கப்பட உள்ளது.இதில் விவசாயிகள், பண்ணையாளர்கள், ஊரக மகளிர், இளைஞர்கள் மற்றும் ஆர்வமுள்ளவர்கள் கலந்து கொள்ளலாம். விருப்பமுள்ளவர்கள் நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்திற்கு நேரில் வந்தோ அல்லது 04286 -266345, 266244 ஆகிய ஃபோன் எண்ணிலோ தொடர்புகொண்டு, வரும், 6ம் தேதிக்குள் பெயர் முன்பதிவு செய்து கொள்ள வேண்டும்.இவ்வாறு, அவர் கூறியுள்ளார்.

**ஊடு பயிரை பயிரிட்டு லாபம் பெற ஆலோசனை**

நாமக்கல்:மோகனூர் வேளாண்மை விரிவாக்க மைய உதவி இயக்குனர் கந்தசாமி வெளியிட்ட அறிக்கை:பயறுவகை பயிர்கள், நம் உடலுக்குத் தேவையான புரதத்தேவையை அளிப்பதில் முன்னிலை வகிக்கின்றன. பயறுவகைப் பயிர்கள் எல்லாவிதமான மண் மற்றும்

தட்பவெப்பநிலைகளையும் தாங்கி வளரும் தன்மை பெற்றவை. பெரும்பாலும் பயறுவகைப் பயிர்கள் ஊடுபயிராகவே பயிரிடப்படுகின்றன.நெல் வயலில் வரப்பு ஓரங்களிலும், கரும்பு, சோளம், மக்காச்சோளம் மற்றும் தோட்டக்கலைப் பயிரான மரவள்ளி சாகுபடியில் ஊடுபயிராகவும் பயறுவகைப்பயிர்கள் பயிரிடப்படுகின்றன. இவ்வாறு ஊடுபயிராகப் பயிரிடப்படுவதால், விவசாயிகள் அக்குறிப்பிட்ட நிலத்தில் பயறுவகைப் பயிர்கள் மூலம் கூடுதல் வருமானம் பெறுவதோடு அந்த வயலில் களைக்கட்டுப்பாடும் சாதகமாகிறது.உளுந்து, பாசிப்பயறு, மற்றும் துவரை போன்ற பயறுவகைப் பயிர்களின் தேவை மற்றும் நுகர்வு நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டே செல்வதால் விவசாயிகள் இப்பயிர்களை தனிப்பயிர்களாகவோ அல்லது ஊடுபயிராகவோ பயிரிட்டு பண்ணை சாகுபடியில் குறைந்த பரப்பில் அதிக வருவாய் ஈட்டவேண்டும். இப்பயிர்களை ஊடுபயிராகப் பயிரிடுகையில் முக்கியப்பயிர் மற்றும் ஊடுபயிர்களின் சத்துத் தேவைகளை அறிந்து இரண்டுக்கும் தனித்தனியாக உரமிடவேண்டும்.

தனிப்பயிருக்கு மட்டும் உரமிடுவதால், ஊடுபயிருக்குத் தேவையான சத்துக்கள் கிடைப்பதில் பயிர்களுக்கு இடையே போட்டி ஏற்படுகிறது. எனவே இரண்டு பயிர்களுக்கும் அனைத்து தேவைகளுக்கும் போட்டி ஏற்படாதவாறு மண்பரிசோதனை அடிப்படையில் உரமிட்டு சாகுபடி செய்தால் இரண்டிலுமே நிறைவான மகசூல் பெறமுடியும்.எனவே பயறுவகைப்பயிர்களை தனிப்பயிராகவோ, ஊடுபயிராகவோ வரும் ஆடிப்பட்டத்தில் பயிரிட்டு நமக்குத் தேவையான புரதத் தேவையை அளிக்கும் இப்பயிர்களின் மூலம், விவசாயிகள் நல்ல வருவாய் பெற வேண்டும்.இவ்வாறு, அவர் தெரிவித்துள்ளார்.

## ரூ.15 லட்சத்திற்கு பருத்தி வர்த்தகம்

நாமக்கல்;நாமக்கல், வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நேற்று, நடந்த பருத்தி ஏலத்தில், 15 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது.நாமக்கல் வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தின் (என்.சி.எம்.எஸ்.,), திருச்செங்கோடு சாலையில் உள்ள குடோனில் பருத்தி ஏலம், நேற்று, நடந்தது. ராசிபுரம், நாமக்கல், சேலம், கரூர், புதுச்சத்திரம், எருமப்பட்டி, திருச்செங்கோடு நாமகிரிப்பேட்டை, புதுப்பாளையம், கல்யாணி உள்ளிட்ட பல்வேறு பகுதியில் இருந்து, ஏராளமான விவசாயிகள், 1,100 பருத்தி மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர்.டி.சி.ஹெச்., ரகம் அதிக பட்சம், 4,559, குறைந்த பட்சம், 3,942 ரூபாய், ஆர்.சி.எச்., ரகம் அதிக பட்சம், 4,369, குறைந்த பட்சம், 3,847 ரூபாய்க்கு ஏலம் போனது. அதேபோல், சுரபி ரகம் அதிக பட்சம், 5, 049, குறைந்த பட்சம், 4,865 ரூபாய்க்கு ஏலம் போனது.கடந்த, நான்கு மாதத்துக்கு பின், தற்போது சுரபி ரகம் ஏலத்துக்கு வருவது குறிப்பிடத்தக்கது. நேற்றைய ஏலத்தில், மொத்தமாக, 1,500 மூட்டை பருத்தி, 15 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது.விருதுநகர், ராஜபாளையம், திருப்பூர், அவிநாசி, பெருந்துறை, கொங்கணாபுரம், ஊத்தங்கரை, ஆத்தூர், சேலம், திருச்செங்கோடு ஆகிய பகுதியைச் சேர்ந்த, வியாபாரிகள் பருத்தியை ஏலம் எடுத்து சென்றனர்.

## ஏமாற்றும் தென்மேற்கு பருவமழை: காய்கறி உற்பத்தி கடும் பாதிப்பு

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில், தென்மேற்கு பருவமழை ஏமாற்றி வருவதால், காய்கறிகள் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. விவசாயத்தை பிரதானமாக கொண்ட தர்மபுரி மாவட்டத்தில், நெல், கரும்பு, மஞ்சள், மரவள்ளி கிழங்கு, தக்காளி, பருத்தி, கேழ்வரகு, சாமை உள்ளிட்ட

பயிர்கள் அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது. இறவை பாசனத்தில், குறிப்பிட்ட பரப்பளவில், மாவட்டம் முழுவதும், புடலங்காய், பாகற்காய், பீர்க்கங்காய், வெண்டைக்காய், கத்தரிக்காய், முள்ளங்கி, முட்டைகோஸ் உள்ளிட்ட, காய்கறி பயிர்களை விவசாயிகள் சாகுபடி செய்து வருகின்றனர்.

இந்தாண்டும், தென்மேற்கு பருவமழை பொய்த்து போன நிலையில், விவசாயிகள் கடந்தாண்டை விட, 40 சதவீதம் காய்கறி பயிர்களை சாகுபடி செய்ய ஆர்வம் காட்டவில்லை. இதனால், உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. கடந்த, மூன்று மாதத்துக்கு முன்னர் வரை, உள்ளூர் சந்தை தேவைகளை பூர்த்தி செய்து வந்த காய்கறி உற்பத்தி தற்போது, குறைந்துள்ளது. இறவை பாசன பகுதியில் முழு அளவில் தண்ணீர் இல்லாமல், உள்ளூர் காய்கறிகளில் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் வெளி மாவட்ட தேவைகளை பூர்த்தி செய்து வந்த காய்கறி உற்பத்தி சமீப நாட்களாக பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், சந்தையில் கத்தரி, வெண்டை, முள்ளங்கி உள்ளிட்ட காய்கறிகள் மட்டுமே அதிக அளவில் விற்பனைக்கு வருகிறது. இவற்றின் விலையும் கடந்த சில தினங்களாக தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இது குறித்து காய்கறி விவசாயிகள் கூறியதாவது: தென்மேற்கு பருவமழை தொடர்ந்து ஏமாற்றி வருவதால், விவசாய கிணறுகளில் தண்ணீர் மட்டம் வெகுவாக குறைந்து வருகிறது. இதனால், விவசாயிகள் சாகுபடி செய்யப்பட்டுள்ள காய்கறி பயிர்களுக்கு, போதிய தண்ணீர் பாய்ச்ச முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. தண்ணீர் பற்றாக்குறையால், விவசாயிகள் காய்கறி பயிர்களை, சாகுபடி செய்ய ஆர்வம் காட்டாமல் உள்ளதால், சந்தைக்கு காய்கறி செல்வது பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், காய்கறி விலை மேலும், அதிகரிக்க வாய்ப்புள்ளது. இவ்வாறு, அவர்கள் கூறினர்.

## விவசாயிகளுக்கு உணவு பாதுகாப்பு திட்ட பயிற்சி

தஞ்சாவூர்: தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம், பேராவூரணி விவசாயிகளுக்கு தேசிய உணவு பாதுகாப்பு பயிற்சி அளிக்கப்பட்டது. வேளாண் உதவி இயக்குனர் பாண்டியராஜன் தலைமை வகித்தார். பேராவூரணி வேளாண் உதவி இயக்குனர் முன்னிலை வகித்தார். சேதுபாவாசத்திரம், பேராவூரணி வட்டாரத்தை சேர்ந்த, 70 விவசாயிகளுக்கு நெல் பயிறுக்கான தேசிய உணவு பாதுகாப்பு திட்ட பயிற்சி, பேராவூரணி வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகத்தில் நடந்தது.தஞ்சை மாவட்ட தரக்கட்டுப்பாடு சேதுபாவாசத்திரம் வட்டார உதவி இயக்குனர் பெரியசாமி, விதைச்சான்று உதவி இயக்குனர் மணிமாறன், நீடாமங்கலம் வேளாண் அறிவியல் நிலைய உதவி பேராசிரியர் ராஜாரமேஷ் ஆகியோர் பயிற்சி அளித்தனர். அரசு அறிவித்துள்ள குறுவை சிறப்பு தொகுப்பு திட்டத்தில், பாய் நாற்றங்கால் தயாரித்து, நடவு இயந்திரம் மூலம் நடவு செய்யும் விவசாயிகள், ஒரு ஏக்கருக்கு, 2,375 ரூபாய் வேளாண் பொறியியல் துறை மூலம் மானியம் பெறலாம்.குறுவை பருவத்தில் உயிர் உரங்கள் மற்றும் நுண்ணுயிர் உரங்களை பயன்படுத்தி, நெல் சாகுபடி செய்யும் விவசாயிகளின் வங்கிக் கணக்கில், 315 ரூபாய் செலுத்தப்படும். விவசாயத்தில் விதை உற்பத்தி செய்து, அதிக லாபம் பெறுவதற்கு குழு அடிப்படையில் விதை பண்ணை அமைத்து, விதைச்சான்று நடைமுறையை பின்பற்றி சான்று விதை உற்பத்தி செய்து, வினியோகம் செய்ய வேண்டும்.பயிறுக்கு சேதம் விளைவித்து மகசூல் இழப்பை ஏற்படுத்தும் பூச்சிகளை கட்டுப்பாட்டுக்குள் வைத்து, நன்மை செய்யும் பூச்சிகள் அதிகளவில் வயலில் இருப்பதற்கு ஏற்ற சூழலை உருவாக்க

வேண்டும், என்று ஆலோசனை வழங்கப்பட்டது. பயிற்சியில் வேளாண்மை அலுவலர்கள் பங்கேற்றனர்.

## அழிவின் விளிம்பில் மலை நெல்லிக்காய்

தாண்டிக்குடி:தாண்டிக்குடி மலைப்பகுதியில் அழிவின் விளிம்பில் உள்ள மலை நெல்லிக்கு மறு வாழ்வு அளிக்க வனத்துறை நடவடிக்கை வேண்டும். நெல்லிக்காயில் விட்டமின்-சி அதிகமாக காணப்படுகிறது. ஒரு பழத்திலிருந்து 650 முதல் 700 மில்லி கிராம் உயிர்சத்து சி அடங்கியுள்ளது மேலும் மலை நெல்லியில் கூடுதலாக பொட்டாஷ் சத்தும் உள்ளது. தற்போது ஒட்டுரக நெல்லிக்காய் சந்தையில் வந்தப் போதும், இயற்கை சூழலில் ரசாயான கலப்பின்றி வனத்திலிருந்து கிடைக்கும் மலை நெல்லி மருத்துவ குணம் நிறைந்துள்ளது என்பது நாம் அறிந்ததே. இனிப்பு சுவை குறைந்து துவர்ப்பு அதிகரித்து காணப்படும். வருடத்தில் 8 மாதங்கள் மகசூலில் பூவுடன் காணப்படும் மலை நெல்லிக்காய் மூலம் தேன் அதிகளவு கிடைக்கிறது.

அதிகளவு மகசூல் காணும் மலை நெல்லி வனப்பகுதியில் அரிதாக எங்கே ஒரு மூளையில் காணும் நிலை உள்ளது. காரணம் காட்டுத் தீயாகும். தோட்டக்கலைத்துறை ஆராய்ச்சியில் அழிந்து வரும் மலை நெல்லிக்காயை எண்ணிக்கையை அதிகரிக்க மென் திசு ஒட்டு முறையில் கன்றுகள் தயார் செய்கின்றனர். மருத்துவ குணம் நிறைந்துள்ள மலை நெல்லிக்காய் மரங்களை பாதுகாத்து ஊக்குவிக்க வனத்துறை முயற்சித்தால் இயற்கை கொடுத்த உயிர்சத்து அனைவருக்கும் கிடைக்க ஏதுவாக அமையும்.

## வரத்து அதிகரிப்பால் பழநியில்காய்கறிகளின் விலை குறைவு:வெண்டை ரூ.8; சுரை ரூ.4

பழநி:பழநிபகுதியில் காய்கறி வரத்து அதிகரித்துள்ளதால் உழவர்சந்தையில் விலை குறைந்துள்ளது. திண்டுக்கல் மாவட்டத்தில் பழநி, கணக்கன்பட்டி, கோம்பைபட்டி, கரடிக்கூட்டம், தாமரைக்குளம், கரிக்காரன்புதூர் உச்ட்பட பல்வேறு பகுதிகளில் தக்காளி, கத்திரிக்காய், முட்டைகோஸ், பாகற்காய், வெண்டைக்காய், சுரைக்காய் சாகுபடி செய்கின்றனர்.தற்போது சுரைக்காய், வெண்டை, பாகற்காய், கொத்தவரை, கத்தரி விளைச்சல் அதிகரித்துள்ளது. இவற்றின் விலையும் கிலோவுக்கு ரூ.4 முதல் ரூ.12க்குள் உள்ளது. சின்ன வெங்காயம் அதிக ஈரப்பதம் காரணமாக அழுகியதால் ரூ.58 வரையும், பல்லாரி வெங்காயம் கிலோ ரூ.26, 30 என உழவர் சந்தையில் விற்கப்படுகிறது.

நேற்றைய காய்கறி விலை நிலவரம்: (கிலோவில்): சுரைக்காய் ரூ.4, வெண்டிக்காய் ரூ.8, பாகற்காய் ரூ.10, கத்திரிக்காய் ரூ.12, கொத்தவரை ரூ.10, முட்டைக்கோஸ்-16, கேரட் ரூ.36, உருளைக்கிழங்கு ரூ. 16, முருங்கபீன்ஸ் ரூ.36, தேங்காய் ரூ.5 முதல் ரூ.15.

உழவர்சந்தை அதிகாரி ஒருவர் கூறுகையில்,"" வழக்கமாக நாள்ஒன்றிற்கு 15 டன் வரை சந்தைக்கு காய்கறிகள் வரும். தற்போது விளைச்சல் அதிகரிப்பு, கேரளாவிற்கு அனுப்புவது குறை உள்ளிட்ட காரணத்தால் சந்தைக்கு 17டன் வரை வருகிறது. சுரைக்காய், கத்திரி, வெண்டை உள்ளிட்ட காய்கறிகளின் விலை கடந்தவாரத்தை விட கிலோவிற்கு ரூ.3 முதல் 5 வரையும், ரூ.60க்கு விற்ற முருங்கைக்காய் ரூ. 36 ஆகவும் குறைந்துள்ளது", என்றார்.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**தமிழகம், புதுச்சேரியில் மழைக்கு வாய்ப்பு**

தமிழகம், புதுச்சேரியில் அடுத்த 24 மணி நேரத்தில் இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்தது.

இதுகுறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரி கூறியதாவது:

தென் மேற்குப் பருவ மழை தீவிரம் அடைந்துள்ளதால், மேற்கு தொடர்ச்சி மலையை ஒட்டிய மாநிலங்களில் கடந்த இரண்டு வாரங்களுக்கும் மேலாக பலத்த மழை பெய்து வருகிறது. தமிழகத்திலும் மேற்கு தொடர்ச்சி மலையை ஒட்டிய மாவட்டங்களில் கடந்த ஒரு வாரமாக பலத்த மழை பெய்து வந்தது.

மழை வாய்ப்பு: வெப்பச் சலனம் காரணமாக தமிழகம், புதுச்சேரியில் வெள்ளிக்கிழமை ஒரு சில இடங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யும். சென்னை மாநகரைப் பொருத்தவரை, வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒரு சில பகுதிகளில், மாலை அல்லது இரவு நேரத்தில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும் என்றார்.

**சென்னை, திருச்சியில் 104 டிகிரி வெயில்**

தமிழகத்தில் கோடைகாலத்துக்குப் பின்னர் வியாழக்கிழமை சென்னை, திருச்சியில் அதிகபட்சமாக 104 டிகிரி ஃபாரன்ஹீட் அளவுக்கு வெயில் பதிவாகியுள்ளது. கடும் வெப்பத்தால், சென்னையில் அனல் காற்றின்

தாக்கம் தீவிரமாக இருந்தது. மேற்குத் தொடர்ச்சி மலையை ஒட்டிய கோவை, நீலகிரி, கன்னியாகுமரி, தேனி ஆகிய மாவட்டங்களில் பலத்த மழை பெய்து வருகிறது. ஆனால், மாநிலத்தின் பிற பகுதிகளில் கோடைக்காலம் நிறைவுபெற்ற பின்னரும் கடும் வெப்பம் நிலவுகிறது. குறிப்பாக, சென்னை, அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் கடுமையான அனல் காற்றுடன் கூடிய வெப்பம் நிலவி வருகிறது.

பொதுமக்கள் அவதி: சென்னை மாநகரில் வியாழக்கிழமை வீசிய அனல் காற்றின் தீவிரத்தால், பொதுமக்களும், வாகன ஓட்டிகளும் கடும் அவதிக்குள்ளாயினர். வியாழக்கிழமை திருச்சி, சென்னையில் அதிகபட்சமாக 104 டிகிரி ஃபாரன்ஹீட் அளவுக்கு வெயில் பதிவானதாக வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

வியாழக்கிழமை பதிவான வெயில் நிலவரம் (ஃபாரன்ஹீட்டில்):

சென்னை நுங்கம்பாக்கம் 104

திருச்சி 104

பாளையங்கோட்டை 102

சென்னை விமான நிலையம் 102

நாகப்பட்டினம் 102

கடலூர் 101

பரங்கிப்பேட்டை 100

கரூர் பரமத்தி 100

மதுரை 100

வேலூர், சேலம் 99

தருமபுரி 98

புதுச்சேரி 105

காரைக்கால் 100

**தேசிய நீர்ப்பாசனத் திட்டத்துக்கு ரூ.50,000 கோடி: மத்திய அமைச்சரவை ஒப்புதல்**

ரூ.50,000 கோடி மதிப்பீட்டிலான புதிய தேசிய நீர்ப்பாசன திட்டத்துக்கு, பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவை வியாழக்கிழமை ஒப்புதல் அளித்தது. ஐந்து ஆண்டுக்கான இந்தத் தொகையில், நிகழ் நிதியாண்டில் ரூ.5,300 கோடி ஒதுக்கீடு செய்யப்படும் என்று மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

இதுகுறித்து அந்த வட்டாரங்கள் மேலும் கூறியதாவது: விவசாயத்துக்கு பருவமழையை மட்டும் நம்பியுள்ள விவசாயிகளின் நிலைமையை மாற்றுவதை நோக்கமாகக் கொண்டு இத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இதன்மூலம், விவசாயத்துக்கு தேவையான தண்ணீர் தட்டுப்பாடின்றிக் கிடைப்பது உறுதி செய்யப்படும். மேலும், தண்ணீரை வீணடிக்காமல் திறம்படக் கையாள்வது ஊக்குவிக்கப்படும் என்று அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. ரூ.200 கோடி: தேசிய இணையவழி வேளாண் பொருள்கள் விற்பனை சந்தைத் திட்டத்துக்கு, அடுத்த 3 ஆண்டுகளுக்கு ரூ.200 கோடி ஒதுக்கீடு செய்யவும் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இந்த திட்டத்தின் மூலம், நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள 585 மொத்தவிலை வேளாண் சந்தைகள் ஒருங்கிணைக்கப்படும்.

**கடல்சார் உணவுப் பொருள் ஏற்றுமதியில் சாதனை**

கடந்த நிதி ஆண்டில் கடல் சார் உணவுப் பொருள்களின் ஏற்றுமதி அதிகரித்து சாதனை புரிந்துள்ளதாக கடல்சார் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் தெரிவித்தது.கேரள மாநிலம், கொச்சியில் கடல்சார் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையத் தலைவர் லீனா நாயர் இது தொடர்பாக

செய்தியாளர்களிடம் வியாழக்கிழமை கூறியதாவது:
கடந்த 2014-2015 நிதி ஆண்டில் 10.51 லட்சம் மெட்ரிக் டன் கடல்சார் பொருள்கள் பல்வேறு நாடுகளுக்கு ஏற்றுமதியாகின. இவற்றின் மதிப்பு ரூ. 33,441.61 கோடியாகும். முந்தைய நிதி ஆண்டுடன் ஒப்பிடுகையில், ஏற்றுமதி 6 சதவீத வளர்ச்சி காணப்பட்டுள்ளது. முந்தைய 2013-2014 நிதி ஆண்டு ஏற்றுமதி மதிப்புடன் ஒப்பிடுகையில், 2014-2015-இல் 10 சதவீத வளர்ச்சி பெற்றுள்ளது.நடப்பு நிதி ஆண்டில் கடல்சார் பொருள்களின் ஏற்றுமதி ரூ. 40,000 கோடிக்கு மேல் இருக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது. இந்திய கடல் சார் பொருள்களின் மிகப் பெரிய சந்தை அமெரிக்காவாகும். கடந்த நிதி ஆண்டின் மொத்த ஏற்றுமதியில் 26 சதவீத அளவு அந்த நாட்டுக்கு ஏற்றுமதியாகியது. அடுத்தபடியாக, தென் கிழக்கு ஆசிய நாடுகளுக்கு 25 சதவீத அளவு ஏற்றுமதி நடைபெற்றுள்ளது. ஐரோப்பிய யூனியன் பகுதிக்கு 20 சதவீத அளவும் ஜப்பானுக்கு சுமார் 9 சதவீத அளவும் ஏற்றுமதியாகியது என்று கடல்சார் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையத் தலைவர் லீனா நாயர் கூறினார்.

**தோட்டக்கலை விழிப்புணர்வு முகாம்**

மதுரை மாவட்டம் வாடிப்பட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் தோட்டக்கலைத்துறை சார்பாக திட்ட விழிப்புணர்வு முகாம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

முகாமுக்கு தோட்டக்கலை உதவி இயக்குநர் அனுசுயா தலைமை வகித்து திட்டங்களை பற்றி விளக்கிப் பேசினார். தேசிய தோட்டக்கலை இயக்க திட்டம் மூலம் பல்வேறு திட்டங்கள் விவசாயிகளின் வாழ்க்கைத் தரம் உயரவேண்டும் என்பதற்காக தமிழக அரசு செயல்படுத்திவருகிறது. அந்தத் திட்டத்தில் மா அடர்நடவுத் திட்டம், கொய்யா

அடர்நடவுத்திட்டம், திசுவாழைக்கன்று நடவுத்திட்டம், பப்பாளி நடவுத் திட்டம், பசுமைக்குடில் அமைத்தல், நிழல்வலை அமைத்தல், மூடாக்கு அமைத்தல் ஆகிய திட்டங்கள் மூலம் விவசாயிகள் தங்களுக்கு தேவையானவற்றை பயன்படுத்தி வருமானத்தை பெருக்கிக்கொள்ளலாம். இதற்குரிய விண்ணப்பங்களை பெற்று நடவடிக்கைகள் உடனுக்குடன் எடுக்கப்படும் என்றார். இதில் தோட்டக்கலை அலுவலர் மலர்விழி, உதவிவேளாண்மை அலுவலர்கள் சிவக்குமார், ஜெயக்குமார், முத்துக்குமார் ஆகியோர் உள்பட விவசாயிகள் கலந்துகொண்டனர்.

**நீலகிரி மாவட்ட விவசாயிகள் கவனத்துக்கு..**

நஞ்சநாடு அரசு தோட்டக்கலைத்துறை பண்ணையில் உருளைக்கிழங்கு விதைகள் விற்பனைக்கு உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து தோட்டக்கலைத்துறை சார்பில் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

நஞ்சநாடு, கோல்கிரைனிலுள்ள அரசு தோட்டக்கலைத்துறை பண்ணைகளில் உயர் விளைச்சல் தரவல்ல, பின் கருகல் நோய் எதிர்ப்பு தன்மை கொண்ட கிரிதாரி ரக உருளைக்கிழங்கு விதைகள் விற்பனைக்கு தயாராக உள்ளது. இவ்விதைகளின் விலை கிலோ ரூ.30. இவ்விதைகளை தேவைப்படும் விவசாயிகள் நஞ்சநாடு அரசு தோட்டக்கலைத் துறை பண்ணை அலுவலரை நேரிலோ அல்லது 98659-05505 என்ற செல்லிடப்பேசி எண்ணிலோ தொடர்பு கொள்ளலாம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கருங்கல்பாளையம் சந்தையில் மாடுகள் விற்பனை அதிகரிப்பு**

ஈரோடு கருங்கல்பாளையம் மாட்டுச் சந்தையில், மாடுகள் விற்பனை அதிகரித்துள்ளது.

ஈரோடு கருங்கல்பாளையத்தில் ஒவ்வொரு வாரமும் புதன் மற்றும் வியாழக்கிழமைகளில் மாட்டுச்சந்தை நடைபெறுவது வழக்கம். இச்சந்தையில் புதன்கிழமை எருமை மாடுகளும், வியாழக்கிழமை பசு மற்றும் எருமைகளும் விற்பனைக்கு கொண்டு வரப்படுகின்றன.

இதில், ஈரோடு, திருப்பூர், கோவை, கரூர், திருச்சி, திண்டுக்கல், தேனி, மதுரை உள்ளிட்ட மாவட்டங்களிலிருந்து விவசாயிகளும், ஆந்திரம், கர்நாடகம், மகாராஷ்டிரம், கோவா, கேரளம் மற்றும் தமிழகத்தின் அனைத்து பகுதிகளில் இருந்து வியாபாரிகளும் பங்கேற்கின்றனர்.

கோவா, ஆந்திரம், கர்நாடகம், கேரளம் ஆகிய மாநிலங்களில் அரசின் திட்டங்களுக்காக நாள்தோறும் 500-க்கும் மேற்பட்ட மாடுகள் இச்சந்தையில் கொள்முதல் செய்யப்படுகின்றன. தரமான மாடுகள் இச்சந்தையில் விற்பனைக்கு வருவதால் அம்மாநில அரசு அதிகாரிகள் முகவர்களை அழைத்துக்கொண்டு நேரடியாக இப்பகுதியில் மாடுகளை கொள்முதல் செய்கின்றனர்.

வழக்கமாக இச்சந்தை காலை 4 முதல் பகல் 11 மணி வரை இயங்கி வந்தது. இந்நிலையில், கடந்த சில மாதங்களுக்கு முன்பு இச்சந்தை திடீரென இரவு 10 முதல் அதிகாலை 4 மணி வரை இயக்கப்பட்டது. இரவு நேரத்தில் சந்தை இயக்கப்பட்டதால் விவசாயிகள், வியாபாரிகளின் பணத்துக்கு பாதுகாப்பு இல்லாத நிலை இருந்தது.

மேலும், வியாபாரிகள், விவசாயிகள் சந்தைக்கு வருவதும் சிரமமாக இருந்தது.

இதையடுத்து, சந்தை நேரத்தை மாற்றி அமைக்கும்படி வியாபாரிகள், விவசாயிகள் வலியுறுத்தியதால் இச்சந்தை கடந்த மார்ச் 12-ஆம் தேதி முதல் மீண்டும் பகல் நேரத்தில் இயங்கத் தொடங்கியது. இதனால் வாரந்தோறும் மாட்டுச்சந்தைக்கு வரும் வியாபாரிகளின் எண்ணிக்கையும், மாடுகளின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றன. இந்த வாரம் சந்தைக்கு 500 பசு மாடுகளும், 400 எருமைகளும் விற்பனைக்கு வந்தன. பசு ரூ. 16 ஆயிரம் முதல் ரூ. 32 ஆயிரம் வரையும், எருமை ரூ. 18 ஆயிரம் முதல் ரூ. 34 ஆயிரம் வரையும் விலைபோனதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

**விவசாயிகள் சிறப்பு முகாம்**

கொடுமுடி வட்டார விவசாயிகளுக்கான சொட்டு நீர் பாசன மானியத்துக்கான விண்ணப்பங்கள் சேகரிக்கும் சிறப்பு முகாம் வியாழக்கிழமை நடைபெற்றது.

கொடுமுடி வட்டார வேளாண்மை அலுவலக வளாகத்தில் நடைபெற்ற இம்முகாமுக்கு மாநில விதை நேர்த்திக் குழு உறுப்பினர் புதூர் கலைமணி தலைமை வகித்தார். வேளாண் இணை இயக்குநர் குணசேகரன் முன்னிலை வகித்தார். கொடுமுடி வேளாண் உதவி இயக்குநர் (பொறுப்பு) தியாகராஜன் வரவேற்றார்.

இதில், சிறு,குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியத்திலும், இதர விவசாயிகளுக்கு 75 சதவீத மானியத்திலும் சொட்டு நீர் பாசனக் கருவிகள் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. இதற்கான விண்ணப்பங்கள் விவசாயிகளிடமிருந்து பெறப்பட்டது.

**ஜூலை 5-இல் உழவர் தினப் பேரணி, கடன் நிவாரண மாநாடு**

**By ஈரோடு**

ஈரோட்டில் உழவர் தினப் பேரணி மற்றும் கடன் நிவாரண மாநாடு ஞாயிற்றுக்கிழமை (ஜூலை 5) நடைபெறவுள்ளது என்று தமிழக விவசாயிகள் சங்க மாநிலத் தலைவர் வெங்கடாசலம் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் ஈரோட்டில் செய்தியாளர்களிடம் வியாழக்கிழமை கூறியது:

தமிழகம் முழுவதும் மஞ்சள், கரும்பு பயிருக்கு கட்டுபடியான விலை கிடைக்காததால் விவசாயிகள் பெரும் அவதிப்பட்டு வருகின்றனர். கரும்புக்கு தமிழக அரசின் நிர்ணய விலையான டன் ஒன்றுக்கு ரூ. 2,550 வீதம் வழங்க வேண்டும் என்ற உத்தரவை தனியார் சர்க்கரை ஆலைகள் பின்பற்றுவதில்லை. மாறாக ரூ. 2,300 மட்டுமே வழங்கி வருகிறது.

மேலும், சர்க்கரை ஆலைகள் இதுவரையிலும் விவசாயிகள் வழங்கிய கரும்புக்கு ரூ. 1000 கோடி வரையிலும் பாக்கி வைத்துள்ளது. இதேபோல மஞ்சளுக்கு போதிய விலை நிர்ணயம் செய்யாததால் விவசாயிகள் தொடர்ந்து பாதிப்படைகின்றனர். விவசாயிகளுக்கு மஞ்சள் விலை கட்டுபடியாகும் அளவிலும், லாபகரமான விலையை விவசாயிகளே நிர்ணயம் செய்து கொள்ளவும், அனைத்து மஞ்சள் மாதிரிகளையும் ஒரே இடத்தில் ஏலம் நடத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். விவசாயிகள் தேசிய மற்றும் கூட்டுறவு வங்கிகளில் பெற்ற பயிர்க்கடன், பொருளீட்டு கடன், பத்திர ஈட்டு கடன் உள்ளிட்ட பல்வேறு கடன்களையும் முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும். வங்கிகளில் இருந்து தங்க நகைகளுக்கு வழங்கி வந்த 3 சதவீத மானியத்தை தொடர்ந்து விவசாயிகளுக்கு வழங்க வேண்டும். நிலம் கையகப்படுத்தும் சட்டத்தை மத்திய அரசு திரும்பப் பெற வேண்டும்.

தேங்காய் கொப்பரைக்கு கிலோ ரூ. 150 வீதம் அரசே விலை நிர்ணயம் செய்ய வேண்டும். வாழை, நிலக்கடலை, பால் விலையை நிர்ணயம் செய்ய வேண்டும்.

பயிர்களை சேதம் செய்யும் வனவிலங்ககுளை கட்டுப்படுத்தவும், பாதிக்கப்படும் விவசாயிகளுக்கு உடனுக்குடன் நஷ்டஈடு வழங்கவும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும், விவசாயிகளின் கோரிக்கை போராட்டத்தின் போது உயர்நீத்த தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தவும், கடன் நிவாரண மாநாடு வழங்கவும் ஈரோட்டில் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் மாநில அளவில் விவசாயிகள் பங்கேற்கும் உழவர் தினப் பேரணி நடைபெற உள்ளது. ஈரோடு சூளை பகுதியில் தொடங்கும் பேரணி, சத்தி சாலை வழியாக செல்லாயம்மாள் மஹாலில் நிறைவடைய உள்ளது. இதைத்தொடர்ந்து, விவசாயிகள் மாநாடு நடைபெறும். இதில், விவசாயிகளின் கோரிக்கைகள் குறித்து முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்படும் என்றார். மாவட்டச் செயலாளர் செங்கோட்டையன் உடனிருந்தார்.

**ஜூலை 5-இல் பல்லடத்தில் உழவர் தின மாநாடு**

பல்லடத்தில் வரும் 5-ஆம் தேதி உழவர் தின மாநாடு நடைபெற உள்ளது.

இதுகுறித்து பல்லடத்தில் உழவர் உழைப்பாளர் கட்சி மாநிலத் தலைவர் கே.செல்லமுத்து வியாழக்கிழமை செய்தியாளர்களிடம் கூறியது:

விவசாயிகளின் கோரிக்கைக்கான போராட்டத்தில் உயிர் நீத்த விவசாயிகளுக்கு அஞ்சலி செலுத்திடவும், விவசாயிகளின் பிரச்னைகளை மத்திய, மாநில அரசுகளின் கவனத்துக்கு கொண்டு செல்லும் வகையிலும், வரும் ஜூலை 5-ஆம் தேதி மதியம் 2 மணிக்கு உழவர் தின மாநாடு பல்லடம் குப்புசாமிநாயுடு புரத்தில் நடைபெறுகிறது.

இதில், பாரதிய கிஸான் யூனியன் தலைவர் யுத்வீர்சிங், நவீன நீர்வழிச்சாலை அமைப்பு தலைவர் ஏ.சி.காமராஜ், கர்நாடக ராஷ்டிரிய

சங்க செயலாளர் கங்காதரன், பொள்ளாச்சி பி.ஏ.கல்வி நிறுவனங்களின் தலைவர் வி.அப்புக்குட்டி உள்பட பலர் பங்கேற்று பேசுகின்றனர் என்றார்.

திருப்பூர் மாவட்ட இளைஞரணி தலைவர் வாவிபாளையம் சோமசுந்தரம், நல்லகாளிபாளையம் ஈஸ்வரன் ஆகியோர் உடனிருந்தனர்.

**விவசாயிகளுக்கான சிறப்பு ஆதார் எண் பதிவு முகாம்**

துடியலூர் அருகே உள்ள காளப்பநாயக்கன்பாளையத்தில் நடைபெற்ற விவசாயிகளுக்கான ஆதார் எண் பதிவு முகாமில் விவசாயிகள் புதன்கிழமை திரளாகப் பங்கேற்றனர்.

வேளாண்மைத் துறையின் மானியம் உள்ளிட்ட பலன்களைப் பெற வேண்டுமானால் விவசாயிகள் தங்களிடம் உள்ள விவசாயிகளுக்கான ஒருங்கிணைந்த கையேட்டில் ஆதார் எண்ணைப் பதிவு செய்ய வேண்டும் என தமிழக அரசு உத்தரவிட்டிருந்தது.

அதனடிப்படையில் பெரியநாயக்கன்பாளையம் வட்டாரத்தில் சின்னத்தடாகம், பன்னிமடை, குருடம்பாளையம், பிளிச்சி, சோமையம்பாளையம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இதற்கான முகாம்கள் நடத்தப்படும் என வேளாண் விரிவாக்க அலுவலர் ஷபிஅகமது தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், சோமையம்பாளையம் ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் விவசாயிகளுக்கென காளப்பநாயக்கன்பாளைம் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்தில் ஆதார் எண் பதிவு முகாம் நடைபெற்றது. இதை ஊராட்சித் தலைவர் ராமகிருஷ்ணன் தொடங்கி வைத்தார்.

உதவி வேளாண் அலுவலர் அனுராதா தலைமையில் வேளாண் துறை பணியாளர்கள், விவசாயிகளுக்கு ஆதார் எண்ணைப் பதிவு செய்து வழங்கினார். இக்கிராமத்தில் மொத்தமுள்ள 158 விவசாயிகளில் பாதிக்கும் மேற்பட்டோர் முகாமில் பங்கேற்றனர்.

ஆதார் எண் பதிவு செய்யாதவர்களுக்கு எதிர்வரும் காலங்களில் பலன்கள் பெறுவதில் சிரமம் ஏற்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர். முகாமில் கிராம நிர்வாக அதிகாரி பண்ணாரி, துணைத் தலைவர் ஆனந்தகுமார் உள்பட பலர் பங்கேற்றனர்.

**வேளாண்மை விற்பனை விழிப்புணர்வு முகாம்**

தமிழ்நாடு வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை சார்பில் விவசாயிகளுக்கு வேளாண்மை விற்பனை குறித்த விழிப்புணர்வு முகாம் அண்மையில் நடைபெற்றது.

விக்கிரவாண்டி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் எல்லைக்கு உள்பட்ட பகுதியான அயன்பனப்பாக்கம் கிராமத்தில் நடைபெற்ற இம் முகாமுக்கு விக்கிரவாண்டி விற்பனைக் கூட கண்காணிப்பாளர் ஆ.சரவணன் தலைமை வகித்தார்.

மேற்பார்வையாளர் எஸ்.லட்சுமிபதி மற்றும் விற்பனைக் கூட பணியாளர்கள் அ.அம்பேத்கர், பூ.குப்புகிருஷ்ணன், அயன்பனப்பாக்கம் ஊராட்சி மன்றத் தலைவர் கமலக்கண்ணன் உள்பட பலர் பங்கேற்றனர்.

நிகழ்ச்சியில் விவசாயிகளுக்கு வேளாண் வணிகத் துறை சார்பில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் வசதிகள் குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட்டு துண்டுப் பிரசுரம் வழங்கப்பட்டது.

அப்பொழுது வேளாண்மை விற்பனை குறித்து விவசாயிகளுக்கு எழுந்த சந்தேகங்களுக்கு உரிய விளக்கம் அளிக்கப்பட்டது.

விவசாயிகளுகக்கு அறுவடைக்குப் பின் செய்நேர்த்தி தொழில்நுட்பம் குறித்தும், தாங்கள் விளைவுக்கும் விளைபொருளுக்கு அதிக விலை கிடைக்க விளை பொருள்களை தரம் பிரிப்பது குறித்தும் எடுத்துரைத்து, உயர்ந்தபட்ச விலை பெற ஆலோசனை வழங்கப்பட்டது.

மேலும், விற்பனைக் கூடங்களில் தானிய சேமிப்பு கிடங்கு, பொருளீட்டுக் கடன் மற்றும் உலர்களங்கள் பயன்பாடு குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது.

**மேட்டூர் அணையின் நீர் மட்டம் 82 அடியை எட்டியது**

மேட்டூர் அணையின் நீர் மட்டம் 82 அடியாக உயர்ந்துள்ளது.

கர்நாடக மாநிலத்தில், காவிரியின் நீர்ப் பிடிப்பு பகுதிகளில் பெய்துவரும் மழையின் காரணமாக அங்கிருந்து உபரிநீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. இதனால், மேட்டூர் அணைக்குத் தொடந்து உபரிநீர் வந்துகொண்டிருக்கிறது.

கடந்த மாதம் 26-ஆம் தேதி முதல் மேட்டூர் அணைக்கு உபரி நீர் வரத்தொடங்கியது. இதனால், மேட்டூர் அணையின் நீர் மட்டம் வேகமாக உயர்ந்து வருகிறது. கடந்த 26-ஆம் தேதி 74.55 அடியாக இருந்த மேட்டூர் அணையின் நீர் மட்டம், வியாழக்கிழமை காலை 81.87 அடியாக உயர்ந்தது.

வியாழக்கிழமை காலை மேட்டூர் அணைக்கு நொடிக்கு 19,712 கனஅடி வீதம் தண்ணீர் வந்துகொண்டிருக்கிறது. அணையிலிருந்து குடிநீர்த் தேவைக்கு நொடிக்கு 500 கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்படுகிறது. அணையின் நீர் இருப்பு 43.84 டி.எம்.சியாக இருந்தது.

கடந்த ஆறு நாள்களில் மட்டும் மேட்டூர் அணையின் நீர் மட்டம் 7.32 அடி உயர்ந்துள்ளது.

**தேங்காய் பருப்பின் விலை சரிவு**

பரமத்தி வேலூர் வட்டாரப் பகுதிகளில் ஏராளமான ஏக்கரில் தென்னை பயிர் செய்யப்பட்டுள்ளது. இங்கு விளையும் தேங்காயை உடைத்து, அதன் பருப்புகளை பரமத்தி வேலூர் வெங்கமேட்டில் நடைபெறும் சேலம் விற்பனை குழு மையத்துக்குக் கொண்டு வரப்பட்டு, ஏலம்

விடப்படுகிறது. வியாழக்கிழமை நடைபெற்ற ஏலத்தில் தேங்காய் பருப்பின் விலை சரிவடைந்துள்ளதால், விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

பரமத்தி வேலூர் சுற்று வட்டாரப் பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் தென்னை பயிர் செய்யப்பட்டுள்ளது. இங்கு விளையும் தேங்காய் பருப்புகளை விவசாயிகள் பரமத்தி வேலூர் வெங்கமேட்டில் உள்ள பரமத்தி வேலூர் சேலம் விற்பனை குழு மையத்துக்குக் கொண்டு வருகின்றனர். பின்னர், அங்கு தரத்திற்கு தகுந்தாற் போல் தேங்காய் பருப்புகள் ஏலம் விடப்படுகின்றன. கடந்த வாரம் நடைபெற்ற ஏலத்தின்போது 1,304 கிலோ தேங்காய் பருப்பு ஏலத்துக்கு வந்திருந்தது. இதில் அதிகபட்சமாக கிலோ ஒன்று ரூ.76.89-ம், சராசரியாக ரூ.75.39-ம், குறைந்தபட்சமாக ரூ.73.89-க்கும் ஏலம் போனது. வியாழக்கிழமை நடைபெற்ற ஏலத்துக்கு சுமார் 1,053 கிலோ விற்பனைக்கு வந்திருந்தது. இதில் கிலோ ஒன்று அதிகபட்சமாக ரூ.63.05-க்கும் சராசரியாக ரூ.60.60-க்கும், குறைந்தபட்சமாக ரூ.58.15-க்கும் ஏலம் போனது. தேங்காய் பருப்பின் வரத்து கடந்த வாரத்தைவிடக் குறைந்துள்ளது. தேங்காய் பருப்பின் விலை சரிந்துள்ளதால், விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

**ஜூலை 7-இல் மஞ்சள் சாகுபடி தொழில்நுட்பம் குறித்த இலவச பயிற்சி**

நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் வரும் 7 ஆம் தேதி காலை 9 மணிக்கு மஞ்சள் சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்த ஒருநாள் இலவச பயிற்சி நடைபெற உள்ளது.

இதுகுறித்து திட்ட ஒருங்கிணைப்பாளர் பி.மோகன் வெளியிட்ட செய்திக்குறிப்பு: இப் பயிற்சியில் மஞ்சளில் உள்ள புதிய மேம்படுத்தப்பட்ட ரகங்கள், அதன் சிறப்பியல்புகள், விதையளவு, விதை நேர்த்தி, நடவு முறை, உர மேலாண்மை, நீர்ப் பாசனம், களை நிர்வாகம்,

பூச்சி மற்றும் நோய் நிர்வாகம், துல்லிய பண்ணை முறையில் மஞ்சள் சாகுபடி முறைகள் மற்றும் விதைக் கிழங்குகளை சேமிக்கும் முறை பற்றிய விளக்கங்கள் அளிக்கப்பட உள்ளன.

இதில் விவசாயிகள், பண்ணையாளர்கள், ஊரக மகளிர், இளைஞர்கள் மற்றும் ஆர்வமுள்ளவர்கள் கலந்து கொள்ளலாம். விருப்பமுள்ளவர்கள் நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்துக்கு நேரில் வந்தோ அல்லது 04286 266345, 266244 என்ற தொலைபேசி எண்ணிலோ தொடர்புகொண்டு 6ஆம் தேதிக்குள் பெயர் முன்பதிவு செய்து கொள்ள வேண்டும்.

**நீர்வடிப் பகுதி விவசாயிகளுடன் மேம்பாட்டு முகமை கருத்தாய்வு**

புதுக்கோட்டை வேளாண் துறையின் மாவட்ட நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமை மற்றும் கிரீன்கேர் பவுண்டேசன் தன்னார்வ தொண்டு நிறுவனம் இணைந்து விசலூர் நீர்வடிப் பகுதியில் மக்கள் பங்கேற்பு கருத்தாய்வு முகாமை புதன்கிழமை நடத்தின.

இதில், மாவட்ட வேளாண் இணை இயக்குநர் (பொ) சதானந்தம் தலைமை வகித்துப் பேசுகையில், நீர்வடிப் பகுதி விவசாயிகளுடன் கருத்தாய்வு செய்து இந்தப் பகுதியில் உள்ள நீர்ஆதாரங்கள், நிலத்தடிநீரை பெருக்க மக்களின் தேவைகளை அப்பகுதிகளுக்கு நேரடியாகச் சென்று ஆய்வு நடத்தி, இதில் பொதுமக்களை பங்கேற்கச் செய்வதே முகாமின் நோக்கம் என்றார்.

மாவட்ட நீர்வடிப் பகுதி உதவிச் செயற்பொறியாளர் காமராஜ், திட்ட சமூகவியல் அலுவலர் ஜெயமேரி, திட்ட செயல் முகவரும், குன்றாண்டார்கோவில் வேளாண் உதவி இயக்குநருமான சங்கரலிங்கம், கிரீன்கேர் நிறுவனர் ரவீந்திரன், நீர்வடிப் பகுதி சங்கத் தலைவர் சண்முகம் ஆகியோர் பேசினர்.

**ஜூலை 21 வரை பயிர்க்கடன் முகாம்**

பெரம்பலூர் மாவட்டத்தில் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளின் மூலம் பயிர்கடன் வழங்குவதற்கான சிறப்பு முகாம் ஜூலை 1 முதல் 21 ஆம் தேதி வரை சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்தில் நடைபெறுகிறது என்றார் மாவட்ட ஆட்சியர் (பொ) ப. மதுசூதன் ரெட்டி.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

2015 - 2016ஆம் ஆண்டில் பயிர்க்கடன் பெற இதுவரை கடன் பெறாத விவசாயிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். ஏற்கெனவே பயிர்க்கடன் பெற்றிருந்தால், அதை உரிய காலத்தில் திருப்பி செலுத்தியிருக்க வேண்டும். பயிர்கடன் பெற விரும்பும் விவசாயிகள் அண்மையில் பெற்ற கணினி சிட்டா, அடங்கல், குடும்ப அட்டை நகல், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியிலிருந்து பெறப்பட்ட தடையில்லாச் சான்று, சேமிப்பு கணக்கு புத்தகத்தின் முதல் பக்க நகல், 2 மார்பளவு புகைப்படம், வாக்காளர் அடையாள அட்டை, ஓட்டுநர் உரிமம், ஆதார் அட்டை ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றில் இரு நகல்களுடன் முகாமில் கலந்துகொள்ளலாம்.

ஜூலை 8 ஆம் தேதி லாடபுரம் (கி), செங்குணம், கீழப்புலியூர் (வ), ஒகளூர் (கி), துங்கபுரம் (வ), நக்கசேலம், புது அம்மாபாளையம், கொட்டரை, ஜமீன் ஆத்தூர், கை.களத்தூர் (கி), பேரையூர், அரும்பாவூர், 9 ஆம் தேதி அம்மாபாளையம், நொச்சியம், கீழப்புலியூர் (தெ), அத்தியூர் (வ), துங்கபுரம் (தெ), டி.களத்தூர், கொளத்தூர் (மே), கூடலூர், பில்லங்குளம், தேவையூர் (வ), மலையாளப்பட்டி, 10 ஆம் தேதி களரம்பட்டி, அரனாரை (வ), ஆலம்பாடி, எழுமூர் (மே), அத்தியூர் (தெ), காடூர் (வ), கன்னாபாடி, குளத்தூர் (கி), புஜங்கராயநல்லூர், காரியனூர்,

தேவையூர் (தெ), தொண்டமாந்துறை (மே) ஆகிய கிராமங்களில் சிறப்பு முகாம் நடைபெற உள்ளது.

எனவே விவசாயிகள் தங்களது பகுதிகளில் நடைபெறும் பயிர்க்கடன் முகாமில் பங்கேற்று பயன்பெறலாம் என்றார் அவர்.

**தேசிய ஆன்லைன் விவசாய சந்தை உருவாக்கம் ரூ.50 ஆயிரம் கோடியில் நீர்ப்பாசன திட்டம் மத்திய அரசு அறிவிப்பு**



புதுடெல்லி,

ரூ.50 ஆயிரம் கோடியில் நீர்ப்பாசன திட்டம் அமல்படுத்தப்படும்; தேசிய ஆன்லைன் விவசாய சந்தை உருவாக்கப்படும் என மத்திய அரசு அறிவித்துள்ளது.

ரூ.50 ஆயிரம் கோடி திட்டம்

பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய மந்திரிகள் குழு, டெல்லியில் நேற்று முன்தினம் (புதன்கிழமை) கூடியது. இந்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து நிதி மந்திரி அருண் ஜெட்லி, நிருபர்களுக்கு நேற்று பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:–

நாட்டில் உள்ள விவசாய நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதி அளிப்பதற்கான பிரதான் மந்திரி கிரிஷி சின்சாய் யோஜனா திட்டத்தின் கீழ், அடுத்த 5 ஆண்டுகளில் மத்திய பட்ஜெட்டில் ரூ.50 ஆயிரம் கோடி செலவிடப்படும். இதை விட மாநிலங்களின் பங்களிப்பு அதிகமாக இருக்கும்.

பாசன வசதி

மகாத்மா காந்தி தேசிய கிராமப்புற வேலை வாய்ப்பு உறுதி திட்டத்தில் இதை பயன்படுத்திக்கொள்ள முடியும்.

நடப்பு நிதி ஆண்டில் ரூ.5 ஆயிரத்து 300 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

(இதில் கூடுதலாக 6 லட்சம் ஹெக்டேர் நிலம் பாசன வசதி பெறும். 5 லட்சம் ஹெக்டேர் நிலப்பரப்பு சொட்டு நீர்ப்பாசன வசதி பெறும்.)

கள அளவில், முதலீடுகளை குவித்து சாதனை படைப்பது, சாகுபடி நிலப்பரப்பை பெருக்குவது, பிற தண்ணீர் சேமிப்பு முறைகளை பயன்படுத்துவது உள்ளிட்டவை இந்த திட்டத்தின் முக்கிய நோக்கங்கள் ஆகும்.

வழிகாட்டும் குழு

இந்த திட்டத்தின் கட்டமைப்பு, மாநில அளவிலான பார்வையை கொண்டது. இதனால் மாநிலங்கள், மாவட்ட அளவிலான நீர்ப்பாசன திட்டங்களை, மாநில அளவிலான நீர்ப்பாசன திட்டங்களை தீட்டலாம்.

இந்த திட்டம், பிரதமர் தலைமையிலான மத்திய அமைச்சகங்களுக்கு இடையேயான தேசிய வழிகாட்டும் குழுவின்மூலம் கண்காணிக்கப்படும். வளங்கள் ஒதுக்கீடு செய்தல், அமைச்சகங்களுக்கு இடையே ஒருங்கிணைத்தல், செயல்பாடுகளை அளவிடுதல், நிர்வாக பிரச்சினைகளை கவனித்தல் ஆகியவற்றுக்காக தேசிய செயற்குழு ஒன்றும் நிதி ஆயோக்கின் துணைத்தலைவர் தலைமையில் அமைக்கப்படும்.

இணையவழி விவசாய சந்தை

தேசிய ஆன்லைன் விவசாய சந்தை (இணைய வழியிலான சந்தை) ஒன்று உருவாக்கப்படும். இதற்காக 3 ஆண்டுகளுக்கு ரூ.200 கோடியை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

இந்த ஆன்லைன் விவசாய சந்தை, நாடு முழுவதும் உள்ள 585 மொத்த விற்பனை சந்தைகளை ஒருங்கிணைக்கும்.

ஒட்டுமொத்த மாநிலத்துக்கு ஒரு உரிமம், ஒரு முனை வரி அமல்படுத்தப்படும். விலை நிர்ணயத்துக்காக மின்னணு வழி ஏலம் நடைபெறும். இதன் விளைவாக ஒரு மாநிலமே சந்தை ஆகும்.

இந்த திட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட 585 ஒழுங்குபடுத்தப்பட்ட சந்தைகள் வரும். மாநிலத்திற்குள் வேளாண் விளைபொருட்கள் பரிமாற்றம் நடைபெறும். இதன் மூலம் விவசாயிகளின் சந்தை அளவு பெருகும்.முதலாவது ஒருங்கிணைந்த தேசிய திறன் மேம்பாடு, தொழில்முனைவோர் கொள்கைக்கு அரசு ஒப்புதல் வழங்கி உள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

**கீரப்பாளையம் பகுதியில் குறுவை நெற்பயிரில் நோய் தாக்குதல் அதிகாரிகள் ஆய்வு**



சேத்தியாத்தோப்பு,

கீரப்பாளையம் பகுதியில் நோய் தாக்கிய நெற்பயிரை வேளாண்மை அதிகாரிகள் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

தட்பவெப்ப நிலை மாற்றம்

சிதம்பரம் அருகே கீரப்பாளையம் ஒன்றியத்திற்கு உட்பட்ட வாழைக்கொல்லை, ஒரத்தூர், பரதூர், பூதங்குடி, கண்ணங்குடி உள்பட பல்வேறு கிராமங்களில் விவசாயிகள் நடப்பாண்டில் 13 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் குறுவை நெற்பயிர் சாகுபடி செய்து பராமரித்து வந்தனர்.

இவை நன்கு வளர்ந்து வந்த நிலையில், தட்ப வெப்ப நிலை மாற்றம் காரணமாக நெற்பயிரில் அதிக அளவில் நோய் தாக்கியது. இதனால் பயிர்கள் கருகி வந்ததால், விவசாயிகள் பெரும் கவலை அடைந்தனர். இதையடுத்து அவர்கள் நோய் தாக்குதலில் இருந்து பயிர்களை காப்பாற்ற பல்வேறு மருந்துகளை அடித்தனர். எனினும் பலன் அளிக்கவில்லை.

ஆய்வு

இது குறித்த தகவலின் பேரில் விருத்தாசலம் மண்டல ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் டாக்டர் கார்த்திகேயன் தலைமையில் உதவி மண்டல ஆராய்ச்சி பேராசிரியர் இந்திராகாந்தி, உதவி வேளாண்மை இயக்குனர் உலகம்மை முருககனி ஆகியோர் நோய் தாக்கிய நெற்பயிர்களை பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

பின்னர் அவர்கள் விவசாயிகளிடம் நோயை கட்டுப்படுத்த செப்பேடே சைக்கிளின், 18 கிராம் காப்பர் ஆக்குலேரைடு மருந்தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து பயிரில் தெளிக்க வேண்டும். அல்லது காப்பர் ஹதர்ஆக்சைடு மருந்தை200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். மேலும் தழைச்சத்து யூரியா உரத்தை கண்டிப்பாக பயன்படுத்த கூடாது என வலியுறுத்தினர். அதிகாரிகள் ஆய்வின் போது கவுன்சிலர் சேகர் மற்றும் சுதாகர், சுரேஷ், ராஜா உள்பட விவசாயிகள் பலரும் உடன் இருந்தனர்.

**விவசாயிகளுக்கு மானிய உதவி வழங்க விண்ணப்பங்கள் பெறும் முகாம் 2 ஒன்றியங்களில் நடந்தது**



தோட்டக்கலைத்துறை சார்பில் மானிய உதவி வழங்குவதற்கான சிறப்பு முகாமில் உதவி இயக்குனர் தேன்மொழி விவசாயிகளிடம் இருந்து விண்ணப்பங்களை பெற்றபோது எடுத்தபடம்.

தோட்டக்கலைத்துறை மூலம் விவசாயிகளுக்கு மானிய உதவிகள் வழங்க விண்ணப்பங்கள் பெறும் முகாம் தர்மபுரி, நல்லம்பள்ளி ஆகிய 2 ஒன்றியங்களில் நடந்தது.

மானிய உதவி

தர்மபுரி மாவட்ட தோட்டக்கலைத்துறை சார்பில் 2015-2016-ம் ஆண்டில் விவசாயிகளுக்கு மானிய உதவி வழங்குவதற்கான விண்ணப்பங்களை பெறும் முகாம் தர்மபுரி தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் அலுவலகத்தில் நேற்று நடந்தது. இந்த முகாமிற்கு உதவி இயக்குனர் தேன்மொழி தலைமை தாங்கினார். சார்நிலை கருவூல அலுவலர் மாதையன், வேளாண்அலுவலர்கள் விஜயலட்சுமி, செல்வம், செந்தில்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்த முகாமில் தர்மபுரி

ஒன்றியத்திற்குட்பட்ட 200-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு மானிய உதவி கோரி விண்ணப்பங்கள் அளித்தனர். இதேபோன்று நல்லம்பள்ளி தோட்டக்கலைத்துறை அலுவலகத்தில் நடந்த முகாமிற்கு உதவி இயக்குனர் சக்திவேல் தலைமை தாங்கினார். உதவி வேளாண்அலுவலர்கள் கனகவர்மன், வெங்கடாசலம், குழந்தைவேல் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்த கூட்டத்தில் 200-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு விவசாய பணிகளுக்கான மானிய உதவி கோரி விண்ணப்பங்கள் அளித்தனர்.

வழிகாட்டுதல்

இந்த முகாம் குறித்து தோட்டக்கலைதுறை அதிகாரிகள் கூறுகையில், தர்மபுரி மாவட்டத்தில் தோட்டக்கலைத்துறை மூலம் பழவகைகள், காய்கறிகள் உள்ளிட்ட தோட்டக்கலை பயிர்களை சாகுபடி செய்ய சிறுவிவசாயிகளுக்கு மானிய உதவி வழங்கப்படுகிறது. இதன்படி ஒரு ஹெக்டேரில் திசுவாழை சாகுபடி செய்ய ரூ.37,500-ம், கொய்யா அடர்நடவு செய்ய ரூ.17,592-ம், உயர்ரக காய்கறிகளுக்கு ரூ.20 ஆயிரமும், பப்பாளிக்கு ரூ.22 ஆயிரமும் மானிய உதவியாக வழங்கப்பட உள்ளது. இந்த மானியம், செடிகள் மற்றும் உரங்களாகவும் ஒரு குறிப்பிட்ட அளவு தொகையாகவும் விவசாயிகளுக்கு வழங்கப்படும். தற்போது பெறப்பட்ட மனுக்களை பரிசீலனை செய்து விவசாயிகள் சாகுபடி செய்யும் நிலத்தின் தன்மைக்கு ஏற்ப உரிய வழிகாட்டுதலுடன் மானியம் அளிக்கப்படும் என்று தெரிவித்தனர்.

**பூதப்பாடி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் ரூ.86½ லட்சத்துக்கு பருத்தி ஏலம்**



அம்மாபேட்டை,

பூதப்பாடி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் ரூ.86½ லட்சத்துக்கு பருத்தி ஏலம் போனது.

பருத்தி ஏலம்

பூதப்பாடி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் நேற்று பருத்தி ஏலம் நடந்தது. விற்பனைக்கூட கண்காணிப்பாளர் மகேந்திரசிங் முன்னிலையில் நடந்த ஏலத்துக்கு சேலம் மாவட்டம் இடைப்பாடி, கொளத்தூர் மற்றும் அந்தியூர், மைலம்பாடி, பர்கூர், அம்மாபேட்டை ஆகிய பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் பருத்தி மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர். மொத்தம் 5 ஆயிரத்து 700 மூட்டைகள் பருத்தி கொண்டு வரப்பட்டு இருந்தது.

இதில் பி.டி. ரக பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு குறைந்தபட்ச விலையாக ரூ.3 ஆயிரத்து 610-க்கும், அதிகபட்ச விலையாக ரூ.4 ஆயிரத்து 370-க்கும் ஏலம் போனது.ரூ.86 லட்சத்துக்கு விற்பனை சுரபி ரக பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு குறைந்தபட்ச விலையாக ரூ.4 ஆயிரத்து 10-க்கும், அதிகபட்ச விலையாக ரூ.4 ஆயிரத்து 430-க்கும் விற்பனை ஆனது. பருத்தி மொத்தம் ரூ.86 லட்சத்து 57 ஆயிரத்து 658-க்கு ஏலம் போனது. சேலம், ஆத்தூர், ஊத்தங்கரை, தர்மபுரி, அவினாசி, கோவை, அன்னூர், பெருந்துறை உள்பட பல்வேறு பகுதிகளை சேர்ந்த வியாபாரிகள் பருத்தியை ஏலம் எடுத்துச்சென்றனர்.

தேங்காய்கள்

அம்மாபேட்டை அருகே உள்ள பூதப்பாடி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் நேற்று விவசாய விளைபொருட்கள் ஏலம் நடந்தது. இந்த ஏலத்துக்கு 11 ஆயிரத்து 500 தேங்காய்கள் கொண்டு வரப்பட்டு இருந்தன. இதில், சிறிய தேங்காய் ஒன்று 3 ரூபாய்க்கும், பெரிய தேங்காய் 12 ரூபாய் 10 காசுக்கும் ஏலம் போனது. மொத்தம் 74 ஆயிரத்து 421 ரூபாய்க்கு தேங்காய் விற்பனை ஆனது. கொப்பரை தேங்காய் 44 மூட்டைகள் கொண்டு வரப்பட்டு இருந்தன. இது குவிண்டால் ஒன்றுக்கு குறைந்தபட்ச விலையாக ரூ.5 ஆயிரத்து 59-க்கும், அதிகபட்ச விலையாக ரூ.6 ஆயிரத்து 815-க்கும் ஏலம் போனது. கொப்பரை தேங்காய் மொத்தம் ரூ.47 ஆயிரத்து 857-க்கு விற்பனை ஆனது.

மக்காச்சோளம்

நெல் 164 மூட்டைகளில் விவசாயிகள் கொண்டு வந்தனர். இதில் பொன்னி ரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு குறைந்தபட்ச விலையாக ரூ.1,667-க்கும், அதிகபட்ச விலையாக ரூ.1,792-க்கும் ஏலம் போனது. ஏ.டி.டி. 39 ரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு குறைந்தபட்ச விலையாக

ரூ.1,307-க்கும், அதிகபட்ச விலையாக ரூ.1,384-க்கும் விற்பனை ஆனது. நெல் மொத்தம் ரூ.1 லட்சத்து 60 ஆயிரத்து 763-க்கு ஏலம் போனது. மக்காச்சோளம் 11 மூட்டைகள் கொண்டு வரப்பட்டு இருந்தது. இது குவிண்டால் ஒன்றுக்கு குறைந்தபட்ச விலையாக ரூ.1,352-க்கும், அதிகபட்ச விலையாக ரூ.1,358-க்கும் ஏலம் போனது. மக்காச்சோளம் மொத்தம் ரூ.13 ஆயிரத்து 458-க்கு விற்பனை ஆனது.

நிலக்கடலை

வெள்ளை ரக எள் 455 மூட்டைகள் கொண்டு வரப்பட்டு இருந்தன. இது குவிண்டால் ஒன்றுக்கு குறைந்தபட்ச விலையாக ரூ.7 ஆயிரத்து 470-க்கும், அதிகபட்ச விலையாக ரூ.8 ஆயிரத்து 460-க்கும் ஏலம் போனது. கருப்பு ரக எள் குறைந்தபட்ச விலையாக குவிண்டால் ஒன்றுக்கு ரூ.3 ஆயிரத்துக்கும், அதிகபட்ச விலையாக ரூ.5 ஆயிரத்து 500-க்கும் ஏலம் போனது. மொத்தம் எள் ரூ.19 லட்சத்து 50 ஆயிரத்து 358-க்கு விற்பனை ஆனது.நிலக்கடலை 266 மூட்டைகள் கொண்டு வரப்பட்டு இருந்தன. இது (பச்சை) குவிண்டால் ஒன்றுக்கு குறைந்தபட்ச விலையாக ரூ.2 ஆயிரத்து 700-க்கும், அதிகபட்ச விலையாக ரூ.3 ஆயிரத்து 300-க்கும் ஏலம் போனது. நிலக்கடலை (காய்ந்தது) குவிண்டால் ஒன்றுக்கு குறைந்தபட்ச விலையாக ரூ.5 ஆயிரத்து 500-க்கும், அதிகபட்ச விலையாக ரூ.6 ஆயிரத்து 400-க்கும் விற்பனை ஆனது. மொத்தம் நிலக்கடலை ரூ.4 லட்சத்து 71 ஆயிரத்து 41-க்கு ஏலம் போனது. நேற்று நடந்த ஏலத்தில் விவசாய விளைபொருட்கள் மொத்தம் ரூ.27 லட்சத்து 14 ஆயிரத்து 948-க்கு விற்பனை ஆனது. பல்வேறு பகுதிகளை சேர்ந்த வியாபாரிகள் விவசாய விளைபொருட்களை போட்டி போட்டு ஏலம் எடுத்துச்சென்றனர்.

**பவானிசாகர் அணையில் இருந்து பாசனத்துக்காக காலிங்கராயன் வாய்க்காலில் இன்று தண்ணீர் திறப்பு முதல்–அமைச்சர் ஜெயலலிதா உத்தரவு**



பவானி,

பவானிசாகர் அணையில் இருந்து பாசனத்துக்காக இன்று (வெள்ளிக்கிழமை) காலிங்கராயன் வாய்க்காலில் தண்ணீர் திறக்க முதல்–அமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டு உள்ளார்.

<u>காலிங்கராயன் வாய்க்கால்...</u>

ஈரோடு மாவட்டத்தில் பவானி ஆற்றில் இருந்து பிரிக்கப்படும் காலிங்கராயன் வாய்க்கால் மூலம் 17 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. பவானியில் தொடங்கி கொடுமுடி அருகே உள்ள ஆவுடையார்பாறை வரை சுமார் 59 மைல் செல்லும் காலிங்கராயன் வாய்க்கால் மூலம் அந்த பகுதி விவசாயிகள் மஞ்சள்,

கரும்பு, வாழை, நெல் பயிரிடுவார்கள். ஆண்டுக்கு 7 மாதங்கள் வாய்காலில் நஞ்சை பாசனத்துக்காக பவானியில் உள்ள காலிங்கராயன் தடுப்பணை மூலம் தண்ணீர் திறக்கப்படும். இதற்காக பவானிசாகர் அணையில் இருந்து பவானி ஆற்றில் கூடுதலாக தண்ணீர் திறப்பது வழக்கம்.

கடந்த மே மாதம் காலிங்கராயன் பாசன விவசாயிகள் மஞ்சள் அறுவடை பணிகளை முடித்திருந்தனர். அதைத்தொடர்ந்து விவசாய நிலங்களை முதல் போக சாகுபடிக்காக உழவுப்பணிகள் செய்து தயாராக வைத்துள்ளனர். இதனால் காலிங்கராயன் வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறந்துவிடவேண்டும் என்று விவசாயிகள் முதல்–அமைச்சர் ஜெயலலிதாவுக்கு கோரிக்கை விடுத்திருந்தனர்.

<u>தண்ணீர் திறப்பு</u>

இதைத்தொடர்ந்து விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று இன்று(வெள்ளிக்கிழமை) முதல் பவானிசாகர் அணையில் இருந்து காலிங்கராயன் வாய்க்காலுக்கு தண்ணீர் திறந்துவிட முதல்–அமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

அதன்படி இன்று முதல் பவானியில் உள்ள காலிங்கராயன் தடுப்பணையில் இருந்து வாய்க்காலுக்கு வினாடிக்கு 300 கன அடி தண்ணீர் திறக்கப்படுகிறது. அது படிப்படியாக 500 கன அடி வரை உயர்த்தப்படும் என்று கூறப்படுகிறது. கடந்த சில நாட்களாக காலிங்கராயன் வாய்க்காலில் பொக்லைன் மூலம் தூர்வாரும் பணியும், கொப்பு வாய்க்கால்களுக்கு குழாய்கள் அமைக்கும் பணியும் நடந்தது. இந்தநிலையில் இன்று (வெள்ளிக்கிழமை) காலிங்கராயன் வாய்க்காலில் தண்ணீர் திறக்கப்பட உள்ளதால் பாசன விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளார்கள்.

**கருவாடு காயவைக்கும் பணி தீவிரம்**



நாகையில் வெயிலின் தாக்கம் அதிகமாக உள்ளதால் கருவாடு காயவைக்கும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.விசைப் படகுகள்

காவிரி டெல்டா மாவட்டங்களில் கடை மடை பகுதியாக நாகை மாவட்டம் உள்ளது. நாகை மாவட்டத்தில் விவசாயம், மீன்பிடித்தொழில் என இரு தொழில்களும் பிரதான தொழில்களாகும். இதில் மீன்பிடித்தொழிலில் 60 சதவீதத்திற்கும் மேலானவர்கள் ஈடுபட்டு வருகின்றனர். நாகப்பட்டினம் மாவட்டத்தில் பழையாறு, திருமுல்லைவாசல், செருதூர், அக்கரைப்பேட்டை, நம்பியார்நகர், கீச்சாங்குப்பம், கோடியக்கரை, ஆறுகாட்டுத்துறை உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த ஆயிரத்திற்கும் அதிகமான மீன்பிடி விசைப் படகுகள் மீன்வளத்துறையின் அனுமதி பெற்று மீன்பிடித்தொழில்

ஈடுபட்டு வருகின்றன. மீன்பிடி சார்ந்த தொழிலில் உலர் மீன் எனப்படும் கருவாடு உற்பத்தி செய்யும் தொழில் முக்கியமானதாகும். நாகை மாவட்டத்தில் கீச்சாங்குப்பம், தொடுவாய், திருமுல்லைவாசல், கீழமூவர்க்கரை, மேலமூவர்க்கரை போன்ற இடங்களில் கருவாடு தொழில் முக்கிய இடத்தைப்பிடித்துள்ளது. இங்கு தயார் செய்யப்படும் கருவாடுகள் கேரளம், ஆந்திரம், கர்நாடகம் உள்ளிட்ட வட மாநிலங்களுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. நவீன கருவாடு தளம் அதேபோல் சிங்கப்பூர் போன்ற வெளிநாடுகளும் நாகப்பட்டினத்தில் தயார் செய்யப்படும் கருவாடுகளை இறக்குமதி செய்கிறார்கள். தற்போது நாகை மாவட்டத்தில் வெயிலின் தாக்கம் அதிகமாக உள்ளது. எனவே மீனவர்கள் தற்போது கீச்சாங்குப்பம் கருவாடு காயவைக்கும் தளத்தில் கருவாடு காயவைக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். இதில் நெத்திலி, சூறை, கானாங்கெளுத்தி மீன் உள்ளிட்ட கருவாடுகள் காயவைக்கப்படுகின்றன. இதேபோல் மீனவர்களின் வலையில் சிக்கும் சிறுசிறுமீன்கள், மீன்முட்டை, கிளிஞ்சல் போன்றவற்றை உலர வைத்து “சங்காயம்” என்று அழைக்கப்படும் கோழித்தீவனங்கள் தயார் செய்யப்படுகின்றன. இந்த கருவாடு காயவைக்கும் பணியில் பெண்கள் உள்பட பலர் ஈடுபட்டு வருகின்றனர். கீச்சாங்குப்பம் கருவாடு காயவைக்கும் பகுதி தற்போது மண் தளமாகவே உள்ளது. இதனால் திடீர் மழை காலங்களில் கருவாடுகள் சேதமடையும் நிலை ஏற்படுகிறது. மேலும், கருவாடுகளை சேமிப்பதற்கு போதுமான இடவசதி இல்லை. எனவே இங்கு நவீன கருவாடு காயவைக்கும் தளமும், கருவாடுகளை சேமிக்க கிடங்கும் அமைத்து தர வேண்டும் என்று மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

முட்டை விலை ஒரே நாளில் 20 காசுகள் சரிவு 340 காசுகளாக நிர்ணயம்



நாமக்கல் மண்டலத்தில் முட்டை கொள் முதல் விலை 20 காசுகள் குறைக்கப்பட்டு, 340 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது. 20 காசுகள் சரிவு நாமக்கல் மண்டலத்தில் முட்டை கொள்முதல் விலை 360 காசுகளாக இருந்து வந்தது. இந்த நிலையில் நேற்று நாமக்கல்லில் நடந்த தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் முட்டை விலையை அதிரடியாக 20 காசுகள் குறைக்க முடிவு செய்தனர். எனவே முட்டை கொள்முதல் விலை 340 காசுகளாக சரிவடைந்து உள்ளது. பிற மண்டலங்களில் முட்டை விலை (காசுகளில்) வருமாறு:- சென்னை-380, ஐதராபாத்-320, விஜயவாடா, தனுகு-330, பார்வாலா-300, மும்பை-360, மைசூர்-380, பெங்களூரு-350, கொல்கத்தா-360, டெல்லி-315. கோழி விலையும் குறைந்தது முட்டைக்கோழி கிலோ ரூ. 65-க்கு விற்பனை செய்யப்பட்டு வந்தது. நேற்று நடந்த கூட்டத்தில் கிலோவுக்கு ரூ.3 குறைக்க முடிவு செய்தனர். எனவே முட்டைக்கோழி விலை கிலோ

ரூ.62 ஆக சரிவடைந்து உள்ளது. இதேபோல் கறிக்கோழி கிலோ ரூ.85-க்கு விற்பனை செய்யப்பட்டு வந்தது. நேற்று பல்லடத்தில் நடந்த கறிக்கோழி ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் கிலோவுக்கு ரூ.3 குறைக்க முடிவு செய்தனர். எனவே கறிக்கோழி விலை கிலோ ரூ.82 ஆக சரிவடைந்து உள்ளது.காரணம் என்ன?

ரம்ஜான் நோன்பு தொடங்கி உள்ளதால் தமிழகம் மற்றும் கேரளாவில் முட்டை விற்பனை மந்தமாகி உள்ளது. இதேபோல் வடமாநிலங்களிலும் முட்டையின் விற்பனை சரிவடைந்து உள்ளதால், பிறமண்டலங்களில் முட்டை விலை குறைந்து வருகிறது. அதற்கு தகுந்தாற்போல் நாமக் கல் மண்டலத்திலும் விலை குறைக் கப்பட்டு இருப்பதாக பண்ணை யாளர்கள் தெரிவித்தனர்.

**இருப்பு வைக்க வியாபாரிகள் தயக்கம்: புளி விலை குறைய வாய்ப்பு**



தேனி, வரத்து அதிகரிப்பு காரணமாக புளியை இருப்பு வைக்க மொத்த வியாபாரிகள் தயக்கம் காட்டி வருவதால் புளி விலை குறைய வாய்ப்பு

உள்ளது.புளி விளைச்சல்தேனி மாவட்டத்தில் கூடலூர், ஆண்டிப்பட்டி, சின்னமனூர், தேனி, பெரியகுளம் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் அதிக அளவில் புளிய மரங்கள் உள்ளன. அவற்றின் மூலம் அதிக அளவில் புளி கிடைக்கிறது. இந்த பகுதிகளில் இருந்து மாவட்டத்தில் உள்ள புளி தட்டும் இடங்களுக்கு கொண்டு சென்று, விதைகள் நீக்கி விற்பனைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. அத்துடன் தேனி மாவட்டத்தில் உள்ள வியாபாரிகள் வெளி மாவட்டம், வெளி மாநிலங்களில் இருந்தும் புளியை மொத்தமாக வாங்கி வந்து, விதைகளை நீக்குகின்றனர். பின்னர் பிற மாவட்டங்களுக்கும், பிற மாநிலங்களுக்கும் விதை நீக்கி பக்குவப்படுத்திய புளி அனுப்பி வைக்கப்படுகிறது. புளி விலை சில்லறையில் கடந்த 2 மாத காலமாக 1 கிலோ ரூ.60 முதல் ரூ.70 வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இன்னும் சில வாரங்களில் புளி விலை குறைய வாய்ப்பு உள்ளதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

இறக்குமதி அதிகரிப்புஇதுகுறித்து தேனியை சேர்ந்த சில்லறை புளி வியாபாரி ஒருவர் கூறியதாவது:மராட்டிய மாநிலத்தில் இருந்து தமிழகத்திற்கு சுமார் 1½ லட்சம் டன் புளியம்பழம் இறக்குமதி செய்யப்பட்டு உள்ளது. இருப்பு வைத்து விற்பனை செய்யலாம் என்ற நோக்கில் மொத்த வியாபாரிகள் அதிக அளவில் இறக்குமதி செய்துள்ளனர். தேனி மாவட்டத்தில் மட்டும் சுமார் 5 ஆயிரம் டன் புளியம்பழம் இறக்குமதி செய்யப்பட்டு உள்ளது.இவற்றை உடைத்து, விதை நீக்குவதற்கு 4 மாதங்களுக்கு மேல் ஆகிவிடும். விதையுடன் கூடிய 1 கிலோ புளியை மொத்த வியாபாரிகள் ரூ.32-க்கும், சில்லறை வியாபாரிகள் ரூ.37-க்கும் கொள்முதல் செய்து வருகின்றனர். இன்னும் 4 மாதங்களில் உள்ளூரில் புளி விளைச்சல் அடைந்து, சீசன் தொடங்கி விடும். வரும் ஆண்டில் புளி விளைச்சல் அதிகம் இருக்கும் என்ற எதிர்பார்ப்பு உள்ளது.விலை குறையும்இதனால் புளியை இருப்பு வைக்க

மொத்த வியாபாரிகள் தயங்கி வருகின்றனர். எனவே விதையை நீக்கி, புளியை அதிகம் இருப்பு வைக்காமல் விற்பனைக்கு அனுப்பி வருகின்றனர். இதனால் இன்னும் சில வாரங்களில் புளி விலை குறையும் வாய்ப்பு உள்ளது.இதனால் சில்லறை வியாபாரிகள் பாதிக்கப்படுவார்கள். மொத்த வியாபாரிகள் தங்களின் இருப்பை காலி செய்வதற்காக, கிடைக்கும் லாபத்திற்கு விற்பனை செய்ய முன்வருவார்கள்.இவ்வாறு அந்த வியாபாரி தெரிவித்தார்.

**குற்றாலத்தில் இன்று படகு சவாரி தொடக்கம்**



தென்காசி,

குற்றாலத்தில் இன்று (வெள்ளிக்கிழமை) படகு சவாரி தொடங்குகிறது.

படகு சவாரி நெல்லை மாவட்டம் குற்றாலத்தில் தற்போது சீசன் நன்றாக உள்ளது. தினமும் ஏராளமான சுற்றுலா பயணிகள் வந்து செல்கிறார்கள். அருவிகளில் தண்ணீர் சீராக விழுகிறது.

குற்றாலம் வரும் சுற்றுலா பயணிகளை மகிழ்விக்க தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகம் சார்பில் ஆண்டு தோறும் ஐந்தருவி ரோட்டில் உள்ள வெண்ணமடை குளத்தில் படகு சவாரி நடத்தப்பட்டு வருகிறது.

இன்று தொடங்குகிறது

தற்போது படகு குழாமில் தண்ணீர் முழுமையாக நிறைந்துள்ளது. எனவே சுற்றுலா வளர்ச்சி கழகம் இன்று (வெள்ளிக்கிழமை) படகு சவாரியை தொடங்குகிறது.

மாவட்ட கலெக்டர் மு.கருணாகரன், படகு சவாரியை காலை 9.30 மணி அளவில் தொடங்கி வைக்கிறார். படகு குழாமில் 4 இருக்கைகள் கொண்ட 17 படகுகளும், 2 இருக்கைகள் கொண்ட 5 படகுகளும், 4 இருக்கைகள் கொண்ட துடுப்பு படகுகள் 5–ம், ஒருவர் மட்டும் செல்லும் கயாக் வகை துடுப்பு படகுகள் 4–ம் உள்ளன.

இத்த தகவலை படகு குழாம் அலுவலர்கள் அசோகன், கருப்பையா ஆகியோர் தெரிவித்தனர்.

தினகரன்

## மேட்டூர் நீர்மட்டம் 82 அடியை எட்டியது




மேட்டூர்: காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில், பருவமழை பெய்து வருவதால், கர்நாடக மாநிலத்திலுள்ள அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. அணைகளின் பாதுகாப்பு கருதி, உபரி தண்ணீர் முழுவதும் காவிரியாற்றில் திறக்கப்படுகிறது. இந்த தண்ணீர் மேட்டூர் அணைக்கு வந்து கொண்டிருப்பதால், நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வருகிறது. கடந்த 26ம் தேதி 74.55 அடியாக இருந்த மேட்டூர் அணை நீர் மட்டம், நேற்று 81.87 அடியாக உயர்ந்தது. நேற்று முன்தினம் வினாடிக்கு 28,600 கனஅடி தண்ணீர் வந்த நிலையில், நேற்று அணைக்கு வினாடிக்கு 19,712 கனஅடி வீதம் தண்ணீர் வருகின்றது. சுமார் 10 ஆயிரம் கன அடி அளவிற்கு நீர்வரத்து குறைந்துள்ளது. அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக வினாடிக்கு 500 கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்படுகிறது.

அணையின் நீர் இருப்பு 43.84 டி.எம்.சி. நேற்று முன்தினம் இரவு ஒகேனக்கல்லில், 29 ஆயிரம் கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருந்த நிலையில், நேற்று காலை பிலிகுண்டுலுவில் அளவிட்டபோது 13 ஆயிரம் கனஅடியாக நீர்வரத்து குறைந்து இருந்தது.

**நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை மேலும் சரிவு**




நாமக்கல்: நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை மேலும் சரிந்துள்ளது. ஒரு முட்டையின் விலை 330 காசாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நாமக்கல்லில் நேற்று தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் விலை நிர்ணய குழு கூட்டம் தலைவர் செல்வராஜ் தலைமையில் நடைபெற்றது. இதில் பிரபல பண்ணையாளர்கள், மற்றும் வியாபாரிகள் கலந்து கொண்டு விலை நிலவரம் குறித்து ஆலோசித்தனர். பின்னர்முட்டை விலையில் 20 காசு குறைக்கப்பட்டு ஒரு முட்டையின் பண்ணைகொள்முதல் விலை 330 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது.

மற்ற மண்டலங்களில் விலை குறைந்துவருவதால் நாமக்கல் மண்டலத்திலும் முட்டை விலை குறைக்கப்பட்டுள்ளது. பண்ணையாளர்கள் 330 காசுக்கு குறைவாக முட்டையை விற்பனை செய்யவேண்டாம் என்.இ.சி.சி தலைவர் செல்வராஜ் தெரிவித்தார். நேற்று நடந்த ஆலோசனை கூட்டத்தில் முட்டைகோழி பண்ணையாளர் சம்மேளன துணைத்தலைவர் வாங்கிலி சுப்ரமணியம் உள்பட பலர் பங்கேற்றனர். சந்ைத நிலவரத்தை ஆய்வு செய்து விலையை நிர்ணயிக்கவேண்டும். பொதுமக்கள், பண்ணையாளர் நலன் பாதுகாக்கும் வகையில் விலை நிர்ணயம் இருக்கவேண்டும் என தெரிவித்தனர். மற்ற மண்டலங்களில் முட்டைவிலை விபரம்: (காசுகளில்): பெங்களூரு 350, மைசூர் 380, ஐதராபாத் 320, மும்பை 360, விஜயவாடா 330, கொல்கத்தா 360, டெல்லி 315 காசுகள்.

**கறிக்கோழி விலை தொடர்ந்து சரிவு**

கோவை, ஜூலை 3: கறிக்கோழி விலை ஒரு மாதமாக தொடர்ந்து சரிந்து வருகிறது. நேற்று தோல் நீக்கிய கறி ரூ.150க்கு சரிந்தது. கறிக்கோழி விலை கடந்த மாதம் 6ம் தேதி பண்ணை கொள்முதல் மொத்த விலை உயிருடன் கிலோ ரூ.105ஆக இருந்தது. பின்னர் 10ம் தேதி ரூ.96 ஆகவும், 11ம் தேதி ரூ.92, 12ம் தேதி ரூ.87, 28ம் தேதி 85 ஆகவும் சரிந்தது. பின்னர் நேற்று (2ம் தேதி) கிலோவிற்கு மேலும் ரூ.4 குறைந்து 81 ஆனது. அதைத்தொடர்ந்து நேற்று சில்லரை விற்பனை நிலையங்களில் உயிருடன் கிலோ ரூ.96 ஆகவும், தோலுடன் கறி கிலோ ரூ.130 ஆகவும், தோல் நீக்கிய கறி கிலோ ரூ.150 ஆகவும் சரிந்தது. கறிக்கோழி விலை கடந்த ஒரு மாதமாக சரிந்து வந்துள்ளது.

**அத்தியாவசிய பொருட்களின் விலையை உயர்த்தக் கூடாது: வியாபாரிகளுக்கு மத்திய அரசு எச்சரிக்கை**




பீகார்: பருவமழை காரணம் காட்டி அத்தியாவசிய உணவு பொருட்களின் விலை உயர்த்தப்படுவதை அனுமதிக்க முடியாது என மத்திய அரசு தெரிவித்துள்ளது. பீகாரில் செய்தியாளர்களிடம் பேசிய மத்திய வேளான் அமைச்சர் ராதா மோகன் சிங் நாடு முழுவதும் ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் மழையின் அளவு 8 முதல் 10 சதவீதம் வரை குறைவாக இருக்கும் என வானிலை மையம் தெரிவித்துள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார். உணவு வகைகளின் பற்றாக்குறைவை காரணம் காட்டி அத்தியாவசிய உணவு பொருட்களின் விலை உயர்வை ஒருபோதும் அனுமத்திக்க முடியாது என அவர் கூறினார்.

உணவு பொருட்களின் விலையை கட்டுக்குள் வைக்க மாநில அரசுகளுக்கு அறிவுறுத்தப்படும் எனவும் ராதாமோகன் தெரிவித்துள்ளார். ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் நாடுமுழுவதும் 600 மாவட்டங்களில் பருவமழை வழக்கத்தை விட குறைவாக இருக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார். உற்பததி குறைவு உள்ளிட்ட பல்வேறு

காரணங்களால் கடந்த ஓராண்டில் பருப்பு உள்ளிட்ட தானிய வகைகளின் விலை 60 சதவீகிதத்திற்கு மேல் உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது

**விழுப்புரம் மாவட்டத்தில் இடி, மின்னலுடன் கனமழை**

விழுப்புரம், : விழுப்புரம் மாவட்டத்தில், நேற்று இரவு இடி, மின்னலுடன் கனமழை பெய்தது. இதனால் பொதுமக்கள், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

விழுப்புரம் மாவட் டத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளாக பருவமழையின் அளவு வெகுவாக குறைந்து கடும் வறட்சி ஏற்பட்டுள்ளது. கடந்த மாதம் துவங்கிய கத்திரிவெயில் முடிந்தாலும் அதன் தாக்கம் குறையாமல் 100 டிகிரிக்கும் மேல் வெயில் வாட்டிவதைத்தது. இதனால் பொதுமக்கள் கடும் அவதிப்பட்டு வருகின்றனர். இந்நிலையில், கடந்த இருதினங்களாக வானம் மேகமூட்டத்துடனும், சாரல்மழை பெய்து வருகிறது.

நேற்று இரவு இடி, மின்னலுடன் மழை பெய்தது. சுமார் அரைமணிநேரம் கொட்டி தீர்த்த மழையினால் வெப்பத்தின் பிடியில் தவித்த மக்கள் மகிழ்ச்சியடைந்தனர். மேலும் நகரில் பல்வேறு தாழ்வான பகுதிகளில் மழைநீர் சூழ்ந்துள்ளது. திருச்சி சாலை, புதியபேருந்துநிலையம், விஜிபி நகர், கீழ்பெரும்பாக்கம் தரைப்பாலம் உள்ளிட்ட இடங்களில் மழைநீர் தேங்கி நின்றது. தொடர்ந்து வானம் மேகமூட்டத்துடனும், மழைபெய்த வண்ணம் உள்ளது.

இதேபோல், செஞ்சி பகுதிகளான அப்பம்பட்டு, அனந்தபுரம், சத்தியமங்கலம், ஆலம்பூண்டி, திருவம்பட்டு, சின்னசேலம் உள்ளிட்ட பகுதிகளிலும் கனமழை பெய்தது. இதனால் பொதுமக்கள், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**கோழி வளர்ப்பில் நோய்தடுப்பு மேலாண்மை பயிற்சி**

நீடாமங்கலம், : திருவாரூர் மாவட்டம் நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் புறக்கடை கோழி வளர்ப்பில் நோய் தடுப்பு மேலாண்மை பற்றிய ஒருநாள் பயிற்சியை நிலைய ஒருங்கிணைப்பாளர் பாஸ்கரன் தலைமை வகித்து தொடங்கி வைத்தார். நிலைய உதவி பேராசிரியர் முனைவர் கவிதா வரவேற்றார். உதவி பேராசிரியர் சரவணன், கால்நடை உதவி பேராசிரியர் மகேந்திரன், திருவாரூர் கால்நடைதுறை இணை இயக்குனர் லூர்துசாமி, பண்ணை மேலாளர் நக்கீரன் ஆகியோர் கலந்து கொண்டு பயிற்சி அளித்தனர்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைகழகத்தின் விரிவாக்க இயக்குனர் முனைவர் பிலிப் கலந்துகொண்டு நோய் மேலாண்மை பற்றியும், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைகழகத்தில் பிரதேயகமாக தயாரிக்கப்பட்ட குருணை வடிவ ராணிக்கட் நோய் எதிர்ப்பு தடுப்பு மருந்தை பயனாளிகளுக்கு வழங்கினார். உதவி பேராசிரியர் ரமேஷ் நன்றி கூறினார்.

குறுவை தொகுப்பு திட்டம் 40 ஆயிரம் ஏக்கரில் இலவசமாக நடவு செய்ய இலக்கு நிர்ணயம் தஞ்சை விவசாயிகள் பயன்பெற அழைப்பு

தஞ்சை, : தஞ்சை மாவட்டத்தில் குறுவை தொகுப்பு திட்டம் 2015ம் ஆண்டுக்கு செயல்படுத்த தமிழக முதல்வர் உத்தரவிட்டுள்ளார். இதன்படி ஆழ்குழாய் கிணற்று பாசனத்தின் மூலம் பாய் நாற்றங்கால் தயாரித்து நடவு செய்யவுள்ள விவசாயிகளுக்கு வேளாண் பொறியியல் துறையின் நடவு இயந்திரம் மூலம் இலவசமாக நடவு செய்யலாம். தஞ்சாவூர் மாவட்டத்தில் 40 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் நடவு இயந்திரம் மூலம் இலவசமாக நடவு செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் வேளாண் பொறியியல் துறை, கூட்டுறவுத்துறை, தனியார் துறை மூலம் நடவு இயந்திரங்கள் இப்பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளது.

கூட்டுறவுத்துறையில் உள்ள நடவு இயந்திரங்கள் மூலம் நடவு செய்ய தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களுக்கு வேளாண்மைத்துறையினரால் கிராமங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நடவு இயந்திரம் மூலம் நடவு செய்ய விரும்பும் விவசாயிகள் தாங்கள் வசிக்கும் பகுதியில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களை நேரில் அணுகி உரிய படிவத்தை பெற்று விவரங்களை தெரிவிக்கலாம்.
மாத்தூர், மானாங்கோரை, துறையூர், மேலக்கரம்பயம், பொய்யுண்டார்கோட்டை, மேலஉளூர், வெள்ளூர், பொன்னாப்பூர், ஏர்வாடி, வைத்தியநாதன்பேட்டை, புனவாசல், எஸ்.புதூர் ஆகிய தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களின் விவகார எல்லையில் உள்ள விவசாயிகள் தங்கள் நிலங்களில் பாய் நாற்றங்கால் அமைத்து குறுவை நடுவதற்கு முன்வரலாம். இதற்கு தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களை அணுகி நடவு நடும் இயந்திரங்களை பெற்று பயன்பெற தஞ்சை மண்டல கூட்டுறவு சங்கங்களின் இணை பதிவாளரை 04362 23128 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு கலெக்டர் சுப்பையன் தெரிவித்துள்ளார்.